தடுக்கப்பட்டவைகள்

# இஸ்லாம் கூறும் இன்னா நாற்பது

தொகுப்பு: நெல்லை இப்னு கலாம் ரசூல்

---

| | |
|---|---|
| ○ இணைவைத்தல் | ○ கஞ்சத்தனம் |
| ○ பெற்றோரைத் துன்புறுத்துதல் | ○ பேராசை |
| ○ இரத்தபந்த உறவுகளைத் துண்டித்தல் | ○ அண்டை வீட்டாரைத் துன்புறுத்துதல் |
| ○ கொலை செய்தல் | ○ இறந்தவருக்காக ஒப்பாரி வைத்தல் |
| ○ நயவஞ்சகம் | ○ பிறரைத் திட்டுதல் சபித்தல் |
| ○ பொறாமைப்படுதல் | ○ கடனை ஏமாற்றுதல் |
| ○ பெருமையடித்தல் | ○ லஞ்சம் பெறுதல் கொடுத்தல் |
| ○ வாக்குறுதிக்கு மாறு செய்தல், மோசடி | ○ செய்த உதவியை சொல்லிக் காட்டுதல் |
| ○ சூனியம், ஜோஸ்யம், மாந்த்ரீகம் | ○ தான் செய்யாததைப் பிறருக்கு கூறுதல் |
| ○ வட்டி உண்ணுதல் | ○ பிற உயிர்களைத் துன்புறுத்துதல் |
| ○ மார்க்கத்தில் புதிதான செயல்களை ஏற்படுத்துதல் | ○ களவு, வழிப்பறி |
| ○ அநாதைகளின் சொத்தை விழுங்குதல் | ○ கற்ற கல்வியை மறைத்தல் |
| ○ பொய்சத்தியம், பொய்சாட்சி | ○ அந்நிய ஆண் பெண் தனித்திருத்தல் |
| ○ விபச்சாரம் | ○ ஆட்சியதிகாரம் |
| ○ புறம், கோள், அவதூறு | ○ பாரபட்சம்(பாகுபாடு) காட்டுதல் |
| ○ முகஸ்துதி | ○ அசுத்தமும், அசிங்கமும் |
| ○ தற்கொலை | ○ கணவன் மனைவி தம் இரகசியங்களை பிறருக்கு கூறுதல் |
| ○ மது அருந்துதல் | ○ அல்லாஹ்வையன்றி பிற(வற்றின்)ர் மீது சத்தியம் செய்தல் |
| ○ சூது, வீண்விளையாட்டு | ○ உலக ஆசை |
| ○ கோபப்படுதல் | ○ பிச்சை எடுத்தல் (யாசகம்) |

## 1. இணைவைத்தல்

---

நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைப்பதை மன்னிக்கமாட்டான் இதைத்தவிர, (மற்ற) எதையும் தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான் யார் அல்லாஹ்வுக்கு இணைவைக்கிறார்களோ அவர்கள் நிச்சயமாக மிகவும் பெரிய பாவத்தையே கற்பனை செய்கின்றார்கள். (4:48)

இதுவே அல்லாஹ்வின் நேர் வழியாகும், தன் அடியார்களில் அவன் யாரை விரும்புகிறானோ, அவர்களுக்கு இதன்மூலம் நேர்வழி காட்டுகிறான் (பின்னர்) அவர்கள் இணைவைப்பார்களானால், அவர்கள் செய்து வந்ததெல்லாம், அவர்களை விட்டு அழிந்துவிடும். (6:88)

ஹதீஸ்கள்.

1. நிச்சயமாக அல்லாஹ் ரோஷமடைகிறான். அவனின் ரோஷமாகிறது அவன் எதனை விலக்கியுள்ளானோ அதனை மனிதன் செய்யும்போது ஏற்படுகிறது. நூல். புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். அபூஹுரைரா (ரலி)

2. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் முஆதே! அல்லாஹ்வின் மீது அடியார்களின் உரிமை என்ன? அடியார்கள் மீது அல்லாஹ்வின் உரிமை என்ன? என்பதை நீர் அறிவீரா! என்று கேட்டார்கள். அதற்கு நான் அல்லாஹ்வும் அவன் திருத்தூதரும் அறிவார்கள் என்று கூறினேன். அதற்கு நபி(ஸல்) அவர்கள் அடியார்கள் மீது அல்லாஹ்வுக்குறிய உரிமையாகிறது. அவர்கள் அவனையே வணங்கவேண்டும். அவனுக்கு எப்பொருளையும் இணையாக்கக்கூடாது என்பதாகும். அல்லாஹ்வின் மீது அடியார்களுக்குறிய உரிமையாகிறது அவனுக்கு எப்பொருளையும் இணையாக்காத அடியார்களை அவன் வேதனை செய்யாமல் இருப்பதாகும். நூல். புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். முஆத் பின் ஜபல் (ரலி)

3. பெரும் பாவங்களில் மிகப்பெரிய பாவத்தை உங்களுக்கு அறிவித்து தரட்டுமா? என நபி(ஸல்) அவர்கள் கேட்க நாங்கள் கூறுங்கள் யாரசூலல்லாஹ் எனச் சொன்னோம். அதற்கு நபி(ஸல்) அவர்கள் அல்லாஹ்வுக்கு இணைவைத்தல், பெற்றோரை வேதனைப்படுத்துதல் பொய்சாட்சியம் கூறுதல் என்று கூறினார்கள். (ஹதீஸின் சுருக்கம்) நூல். புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். அபூபக்கர்(ரலி)

4. ஏழு பெரும் பாவங்கள்:- 1. அல்லாஹ்வுக்கு இணைவைத்தல் 2. சூனியம் செய்வது 3. அல்லாஹ் விலக்கியுள்ள உயிரை கொல்வது (கொலை செய்வது) 4. வட்டி உண்பது 5. அநாதைகளின பொருளை அநியாயமாக உண்பது 6. போரில் புறமுதுகுக் காட்டுவது. 7. அப்பாவியான மூஃமினான பத்தினிப் பெண்ணை அவதூறு கூறுவது. நூல். புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். அபூஹுரைரா (ரலி)

5. அல்லாஹ் கூறுகிறான் நான் கூட்டாளிகளின் கூட்டைவிட்டும் தேவையற்றவன். (எனக்கு கூட்டாளிகளாகவோ, இணையாகவோ யாரும் இல்லை) ஆகவே ஒரு அடியான் ஒரு அமலை செய்து அதில் என்னோடு வேறு எவரையும் கூட்டாக்கிக் கொள்வானேயானால் அவனையும், அவனது இணைவைக்கும் செயலையும் விட்டுவிடுவேன். (அந்த அமலுக்கு எந்த நற்கூலியும் கிடைக்காது) நூல். முஸ்லிம் அபூஹுரைரா (ரலி)

6. அல்லாஹ் கூறுகிறான் ஆதமின் மகனே! நீ என்னை அழைத்தபொழுதெல்லாம் என் மீது ஆதரவு வைத்தபொழுதெல்லாம் உன்னை நான் மன்னித்தேன். உன்நிலை எப்படி இருந்தபோதிலும் சரியே அதை நான் பொருட்படுத்தவில்லை. ஆதமின் மகனே! உன் பாவங்கள் வானளாவ இருந்தாலும் அவைகளுக்காக நீ என்னிடம் பிழைபொறுக்கத் தேடு. உன்னை மன்னித்து விடுவேன். ஆதமின் மகனே! நீ பூமி நிறைய பாவங்களை கொண்டு வந்து எனக்கு நீ இனைவைக்காதவனாக என்னை சந்தித்தால் உனக்கு பூமி நிரம்ப மன்னிப்பை அளிப்பேன். நூல். திர்மிதி அறிவிப்பவர். அனஸ் (ரலி)

## 2. பெற்றோரைத் துன்புறுத்துதல்

அவனையன்றி (வேறு எவரையும்) நீர் வணங்கலாகாது என்றும், பெற்றோருக்கு நன்மை செய்யவேண்டும் என்றும் உம்முடைய இறைவன் விதித்திருக்கின்றான் அவ்விருவரில் ஒருவரோ அல்லது அவர்கள் இருவருமோ உம்மிடத்தில் நிச்சயமாக முதுமை அடைந்து விட்டால், அவர்களை உஃப் (சீ) என்று (சடைந்தும்) சொல்ல வேண்டாம் - அவ்விருவரையும் (உம்மிடத்திலிருந்து) விரட்ட வேண்டாம் - இன்னும் அவ்விருவரிடமும் கனிவான கண்ணியமான பேச்சையே பேசுவீராக! (17:23)

தன் தாய் தந்தையருக்கு நன்மை செய்யும்படியாக நாம் மனிதனுக்கு வஸிய்யத்து செய்திருக்கிறோம் எனினும், (மனிதனே!) உனக்கு அறிவு இல்லாத ஒன்றை எனக்கு இணையாக்கும்படி அவ்விருவரும் உன்னை வற்புறுத்தினால், நீ அவ்விருவருக்கும் கீழ்படிய வேண்டாம் என்னிடமே உங்கள் அனைவரின் மீளுதலும் இருக்கிறது நீங்கள் செய்து கொண்டிருந்தவை பற்றி அப்போது நான் உங்களுக்கு அறிவிப்பேன். (29:8)

ஹதீஸ்கள்.

1. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். ஒரு மகன் தன் தந்தையின் உபகாரத்திற்குப் பகரம் செய்ய முடியாது. எனினும் (ஒரு வேளை) தந்தை அடிமையாக ஆக்கப்பட்டிருப்பதைக் கண்டு அவரை விலைக்கு வாங்கி மகன் உரிமைவிட்டாலே தவிர. நூல். முஸ்லிம் (313) அறிவிப்பவர். அபூஹூ ரைரா (ரலி)

2. அபூ அப்திர் ரஹ்மான் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அறிவிக்கிறார்கள். நான் நபி(ஸல்) அவர்களிடம் செயல்களில் அல்லாஹ்வுக்கு மிகப் பிரியமானது எது? எனக் கேட்டேன் அதற்கவர்கள் தொழுகையை அதற்குரிய நேரத்தில் தொழுவதாகும் எனக் கூறினார்கள். பின்னர் எது? எனக் கேட்டேன். அதற்கவர்கள் பெற்றோருக்கு நன்மை செய்வதாகும் என்றார்கள். பின்னர் எது? எனக் கேட்டேன். அதற்கவர்கள் அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரிவதாகும் எனக்கூறினார்கள். நூல். புகாரி, முஸ்லிம் (312)

3. அபூ ஹூ ரைரா (ரலி) அறிவிக்கிறார்கள். ஒரு மனிதர் அண்ணல் நபி(ஸல்) அவர்களின் சமூகத்திற்கு வந்து அல்லாஹ்வின் திருத்தூதரே! என் அழகிய தோழமைக்கு மக்களில் அதிக உரிமை பெற்றவர் யார்? என வினவினார். அதற்கு அண்ணல் நபி(ஸல்) அவர்கள் உம் தாய் எனப் பகர்ந்தார்கள். பின்னர் யார்? என அவர் வினவினார். அதற்கவர்கள் உம் தாய் என்றார்கள் பின்னர் யார் என அவர் வினவினார். அப்பொழுதும் உம் தாய் என்று அண்ணல் நபி(ஸல்) கூறினார்கள். பின்னர் யார்? என்றார் அப்பொழுது உம் தந்தை என அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல். புகாரி, முஸ்லிம் (316)

மற்றொரு அறிவிப்பில் அல்லாஹ்வின் திருத்தூதரே! என் அழகிய தோழமைக்கு அதிக உரிமைப் பெற்றவர் யார்? என ஒருவர் அண்ணலாரிடம் வினவினார். அதற்கவர்கள் உம் தாய், பின்னர் உம் தாய், பின்னர் உம் தாய், பின்னர் உம் தந்தை, பின்னர் உம் நெருங்கிய உறவினர்கள் என்று கூறினார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

4. அபூபகரா நுபைவு பின் ஹாரிஸ் (ரலி) அறிவிக்கிறார்கள் பாவங்களில் மிகப் பெரும் பாவம் எது என நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா? என அண்ணல் நபி(ஸல்) அவர்கள் மும்முறை கேட்டார்கள். நாங்கள் ஆம் (அறிவித்துத் தாருங்கள்) இறைத்தூதர் அவர்களே! என்று கூறினோம். இறைவனுக்கு இணைவைப்பதும், பெற்றோரை வேதனை செய்வதும் (பாவங்களில் மிக பெரும் பாவாமாகும்) எனப் பதர்ந்தார்கள்.

அப்போது அண்ணலார் சாய்ந்து உட்கார்ந்து இருந்தார்கள் பிறகு எழுந்து அமர்ந்து கூறினார்கள். அறிந்து கொள்ளுங்கள். பொய் உரைப்பதும் பொய்ச் சாட்சி கூறுவதும் கூட (பாவங்களில் பெரும் பாவமாகும்) இதனை திரும்பத் திரும்பக் கூறினார்கள் எதுவரையெனில் அவர்கள் வாய் மூடினால் நலமாக இருக்குமே என்று நாங்கள் எண்ணும் வரை. நூல்கள். புகாரி, முஸ்லிம் (336)

5. அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் பின் அம்ரு பின் ஆஸ் (ரலி) அறிவிக்கிறார்கள். ஒரு மனிதன் தன் பெற்றோரைத் திட்டுவது பெரும் பாவங்களில் அடங்கியதாகும்.

அப்போது இறைத்தூதர் அவர்களே! ஒரு மனிதன் தன் பெற்றோரைத் திட்டுவானா? எனத் தோழர்கள் கேட்டார்கள். அதற்கு நப(ஸல்)அவர்கள் ஒரு மனிதன் மற்றொரு மனிதனின் தந்தையைத் திட்டுகிறான். அவன் இவன் தந்தையைத் திட்டுகிறான். ஒருவன் மற்றொருவனின் தாயைத் திட்டுகிறான். அவன் இவன் தாயைத் திட்டுகிறான். (இது தன் தாய், தந்தையைத் திட்டுவது போன்றாகும். ) புகாரி, (338)

மற்றொரு அறிவிப்பில் ஒரு மனிதன் தன் பெற்றோரை சபிப்பது மிகப் பெரும் பாவங்களில் நின்றுமுள்ளதாகும் என நபி(ஸல்)கூறினார்கள். அவ்வாறு ஒரு மனிதன் தன் பெற்றோரைச் சபிப்பானா? இறைத்தூதர் அவர்களே! எனக் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் ஒரு மனிதன் மற்றொரு மனிதனின் தந்தையைத் திட்டுகிறான் அவன் இவன் தந்தையைத் திட்டுதிறான். ஒருவன் மற்றொரு மனிதனின் தாயைத் திட்டுகிறான். அவன் இவன் தாயைத் திட்டுகிறான். (இது தன் பெற்றோரை தானே சபிப்பது போன்றாகும்) எனக் கூறினார்கள்.

## 3. இரத்தபந்த உறவுகளைத் துண்டித்தல்.

---

இன்னும், உறவினருக்கு அவருடைய உரிமை (பாத்தியதை)களைக் கொடுப்பீராக மேலும், ஏழைகளுக்கும் வழிப்போக்கர்களுக்கும், (அவரவர்களுக்கு உரியதைக் கொடுத்து விடுவீராக!) வீணாக(ப்பொருளை) விரையஞ் செய்யாதீர். (17:26)

மேலும், அல்லாஹ்வையே வழிபடுங்கள் அவனுடன் எதனையும் இணை வைக்காதீர்கள். மேலும், தாய் தந்தையர்க்கும், நெருங்கிய உறவினர்களுக்கும். அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், அண்டை வீட்டிலுள்ள உறவினர்களுக்கும், அருகிலுள்ள அண்டை வீட்டாருக்கும், (பிரயாணம், தொழில் போன்றவற்றில்) கூட்டாளிகளாக இருப்போருக்கும், வழிப்போக்கர்களுக்கும், உங்களிடமுள்ள அடிமைகளுக்கும் அன்புடன் உபகாரம் செய்யுங்கள் நிச்சயமாக அல்லாஹ் கர்வமுடையோராக, வீண் பெருமை உடையோராக இருப்பவர்களை நேசிப்பதில்லை. (4:36)

ஹதீஸ்கள்.

1. அண்ணல் நபி(ஸல்) அவர்கள் நவின்றதாக அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார்கள். அல்லாஹு தஆலா படைப்புகளைப் படைத்து முடித்ததும் இரத்த பந்த உறவு எழுந்தது. அல்லாஹு தஆலாவிடம் (யா அல்லாஹ்) இது இரத்த பந்தத்தை துண்டிப்பதைவிட்டும் உன்னிடம் பாதுகாப்பு தேடக்கூடிய இடமாகும் (சந்தர்ப்பமாகும்) எனக் கூறியது. அதற்கு அல்லாஹு தஆலா ஆம்! உன்னைச் சேர்ந்துக் கொள்பவரை நான் சேர்த்துக் கொள்வதும், உன்னைத் துண்டிப்பவரை நான் துண்டித்து விடுவதும் உனக்கு திருப்திதானே! எனக் கேட்டான். அதற்கு இரத்த பந்தம், ஆம்! என பதிலுரைத்தது. அதற்கு அல்லாஹு தஆலா, அது உனக்கு உண்டு எனக் கூறினான்.

பின்னர் அண்ணல் நபி(ஸல்) கூறினார்கள். நீங்கள் விரும்பினால் (பின்வரும்) வசனத்தை ஓதுங்கள்!

(போருக்கு வராது) நீங்கள் பின் வாங்குவீர்களாயின், நீங்கள் பூமியில் குழப்பம் உண்டாக்கி உங்கள் சுற்றத்தாரை (அவர்களுடன் கலந்து உறவாடுவதிலிருந்தும்) துண்டித்து விடவும் முனைவீர்களோ?

இத்தகையோரைத் தாம் அல்லாஹ் சபித்து, இவர்களைச் செவிடாக்கி இவர்கள் பார்வைகளையும் குருடாக்கி விட்டான். (47:22, 23) நூற்கள். புகாரி, முஸ்லிம் (315)

புகாரியின் மற்றொரு அறிவிப்பில் அல்லாஹ{ு} தஆலா (இரத்தபந்த உறவை நோக்கி) உன்னைச் சேர்த்துக் கொள்பவரை நான் சேர்த்துக் கொள்வேன் உன்னைத் துண்டிப்பவரை நான் துண்டித்துவிடுவேன் என்று கூறியதாக வருகிறது.

2. அண்ணல் நபி(ஸல்) அவர்கள் நவின்றதாக அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறாகள். அல்லாஹ்வையும், மறுமை நாளையும் நம்பிக்கைக் கொண்டவர் தம் விருந்தாளியைக் கண்ணியப் படுத்தட்டும்! அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கைக் கொண்டவர் தம் உறவினரைச் சேர்த்துக் கொள்ளட்டும்! அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கைக் கொண்டவர் நல்லதைப் பேசட்டும்! அல்லது வாய்மூடி இருக்கட்டும்! நூல். புகாரி, முஸ்லிம் (314)

3. அபூ முஹம்மது ஜுபைர் பின் முத்இம் (ரலி) அறிவிக்கிறார்கள். அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். உறவை துண்டிப்பவன் சுவர்க்கத்தில் நுழையமாட்டான். நூல். புகாரி, முஸ்லிம் (339)

4. உங்கள் உறவினர்களுடன் சேர்ந்து வாழுமளவுக்கு உங்கள் பாரம்பர்யத்தை அறிந்து கொள்ளுங்கள் ஏனெனில் உறவினருடன் இணைந்து வாழ்வது குடும்பத்தில் நேசத்தை ஏற்படுத்தும். செல்வத்தை பெருக்கும் மரணத்தை தாமதப்படுத்தும். நூல். திர்மிதி (2045) அறிவிப்பவர். அபூஹுரைரா(ரலி)

## 4. கொலை செய்தல்

---

எவனேனும் ஒருவன், ஒரு முஃமினை வேண்டுமென்றே கொலை செய்வானாயின் அவனுக்கு உரிய தண்டனை நரகமே ஆகும். என்றென்றும் அங்கேயே தங்குவான். அல்லாஹ் அவன் மீது கோபம் கொள்கிறான் இன்னும் அவனைச் சபிக்கிறான். அவனுக்கு மகத்தான வேதனையையும் (அல்லாஹ்) தயாரித்திருக்கிறான். (4:93)

இதன் காரணமாகவே, "நிச்சயமாக எவன் ஒருவன் கொலைக்குப் பதிலாகவோ அல்லது பூமியில் ஏற்படும் குழப்பத்தை(த் தடுப்பதற்காகவோ) அன்றி, மற்றொருவரைக் கொலை செய்கிறானோ அவன் மனிதர்கள் யாவரையுமே கொலை செய்தவன் போலாவான் மேலும், எவரொருவர் ஓர் ஆத்மாவை வாழ வைக்கிறாரோ அவர் மக்கள் யாவரையும் வாழ வைப்பவரைப் போலாவார்" என்று இஸ்ராயீலின் சந்ததியினருக்கு விதித்தோம். மேலும், நிச்சயமாக நம் தூதர்கள் அவர்களிடம் தெளிவான அத்தாட்சிகளைக் கொண்டு வந்தார்கள் இதன் பின்னரும் அவர்களில் பெரும்பாலோர் பூமியில் வரம்பு கடந்தவர்களாகவே இருக்கின்றனர். (5:32)

ஹதீஸ்கள்.

1. நபி(ஸல்) அவர்கள் நவின்றதாக அபூ ஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள். உங்களை அழித்து நாசமாக்கக் கூடிய ஏழு விஷயங்களையும் விட்டும் விலகிக் கொள்ளுங்கள்! என்றபோது தோழர்கள் அவை யாவை யாரஸுலல்லாஹ்! எனக் கேட்டனர். அதற்கு நபி(ஸல்) அவர்கள் 1. அல்லாஹ்வுக்கு இணைவைப்பது. 2. சூனியம் செய்வது. 3. அல்லாஹ் விலக்கியுள்ள உயிரைக் கொல்வது. 4. வட்டியை உண்பது 5. அனாதைகளின் பொருளை உண்பது 6. போருடைய நாளில் புறமுதுகுக் காட்டிச் செல்வது. 7. அப்பாவியான முஃமினான பத்தினிப் பெண்கள் மீது அவதூறு கூறுவது ஆகியவையாகும் எனப் பகர்ந்தார்கள். நூல். புகாரி, முஸ்லிம் (1614)

2. இரண்டு முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் தங்கள் வாளால் சண்டையிட்டுக் கொண்டால் கொல்பவரும் கொல்லப்படுபவரும் இருவரும் நரகிலிருப்பார் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அதற்கு நான் அல்லாஹ்வின் திருத்தூதரே! கொன்றவன் கொலைக்காரன் எனவே நரகுக்கு செல்கிறான் கொல்லப்பட்டவன் நிலை என்ன? அவன் ஏன் நரகுக்கு செல்கிறான் என வினவ நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் கொல்லப்பட்டவன் கொன்றவனை கொல்ல ஆவல் கொண்டுயிருந்தான் எனவே அவனுக்கும் நரகம் என விடை கூறினார்கள். நூல். புகாரி, முஸ்லிம் (9) அறிவிப்பவர். அபூபக்ரா (ரலி)

3. மறுமையில் இரத்தம் சிந்தப் பட்டதைப் (கொலை) பற்றி முதன் முதலில் தீர்மானிக்கப்டும் நூல். புகாரி அறிவிப்பவர். இப்னுமஸ்ஊத் (ரலி)

4. கொலைகாரனின் கடமையான மேலதிகமான வணக்க வழிபாடுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. நூல். அபூதாவூத் அறிவிப்பவர். உபாதாபின் ஸாமித் (ரலி)

5. உங்களில் ஒருவர் உங்கள் சகோதரரிடம் ஆயுதத்தை வைத்துக் கொண்டு சைகை செய்ய வேண்டாம். ஏனெனில் நிச்சயமாக ஷைத்தான் அவரின் கையிலிருந்து எப்பொழுது ஆயுதத்தை நழுவச் செய்வான் என்பது தெரியாது (கொலைப்பழிக்கு ஆளாகி நரகில் விழ வேண்டிவரும்) நூல். புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். அபூஹுரைரா (ரலி)

யார் தன் சகோதரரிடம் இரும்பைக் கொண்டு சைகை செய்கிறாரோ அவர் அதனை கீழே வைக்கும் வரை மலக்குமார்கள் சபிக்கின்றனர். அவர் தன் உடன் பிறந்த சகோதரராக இருப்பினும் சரியே. நூல். புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். அபூஹுரைரா (ரலி)

## 5. நயவஞ்சகம்

---

நிச்சயமாக இந்நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை வஞ்சிக்க நினைக்கின்றனர் ஆனால் அவன் அவர்களை வஞ்சித்துவிடுவான் தொழுகைக்கு அவர்கள் தயாராகும் பொழுது சோம்பலுடையோராகவே நிற்கிறார்கள் - மனிதர்களுக்குத் (தங்களையும் தொழுகையாளியாக்கி) காண்பிப்பதற்காக (நிற்கிறார்கள்) இன்னும், மிகச் சொற்ப அளவேயன்றி அவர்கள் அல்லாஹ்வை நினைவு கூர்வதில்லை.

இந்த முனாஃபிக்குகள் முஃமின்களின் பக்கமுமில்லை, காஃபிர்களின் பக்கமுமில்லை இரு பிரிவினர்களுக்கிடையே தத்தளிதுக் கொண்டிருக்கிறார்கள் அல்லாஹ் எவரை வழி தவறச் செய்துவிட்டானோ, அவருக்கு (நபியே!) யாதொரு வழியையும் நீர் காணமாட்டீர். (4:142, 143)

ஹதீஸ்கள்.

1. நயவஞ்சகனின் அடையாளங்கள் மூன்றாகும். 1. அவன் பேசினால் பொய்யுரைப்பான். 2. வாக்குறுதி அளித்தால் மாறு செய்வான். 3. நம்பினால் மோசம் செய்வான் நூல். புகாரி, முஸ்லிம் (199) அறிவிப்பவர். அபூஹுரைரா (ரலி)

2 அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் வாயிலாக அறிவிக்கப்படுகிறது. சில மனிதர்கள் அவர்களிடம் வந்து நாங்கள் எங்கள் அரசர்களிடம் செல்கிறோம். நாங்கள் அவர்களை விட்டு வெளியேறிய பிறகு அவர்களைப் பற்றி நாங்கள் பேசுவதற்கு மாற்றமாக (முகஸ்துதிக்காக அங்கு அவர்களை புகழ்ந்து) அவர்களிடம் பேசுகிறோம் எனக் கூறினார்கள். அதற்கு அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் இதனைத்தான் நாங்கள் நிபாக் (நயவஞ்சகம்) என நபி(ஸல்) அவர்கள் காலத்தில் எண்ணுபவர்களாக இருந்தோம் எனக் கூறினார்கள். நூல். புகாரி (1618)

3. ஜுன்துப் பின் அப்தில்லாஹ் பின் ஸுஃப்யான் (ரலி) அறிவிக்கிறார்கள். யார் மக்கள் புகழ்வதற்காக ஒரு அமலைச் (நற்செயலைச்) செய்வாரோ அவரைக் கியாமத் நாளில் அல்லாஹ் கேவலப்படுத்துவான்.

யார் மக்களுக்குக் காட்டுவதற்காக ஓர் அமலைச் செய்வாரோ அல்லாஹ் கியாமத் நாளில் மக்களின் முன்னிலையில் அவரின் இரகசியங்களை வெளிப்படுத்துவான். நூல். புகாரி, முஸ்லிம் (1619)

4. நபி(ஸல்) அவர்கள் நவில தாம் செவிமடுத்ததாக அபூ ஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள். கியாமத் நாளில் முதன் முதலாகத் தீர்ப்பு வழங்கப்படுபவர் அல்லாஹ்வின் பாதையில் ஷஹீதான மனிதராவார். அவர் கொண்டு வரப்படுவார். அல்லாஹ் தான் அவருக்கு அருளிய அருட்கொடைகளை (ஒவ்வொன்றாக) எடுத்துரைப்பான். அவர் அவைகளைப் புரிந்து கொண்டு விடுவார். (பின்னர்) அவ்வருட்கொடைகளின் விஷயத்தில் (நமக்கு நன்றி செலுத்தி) நீ என்ன அமல் (நற்செயல்) செய்தாய்? என அவரிடம் அல்லாஹ் கேட்பான். அதற்கவர் நான் உன் பாதையில் போர் செய்து ஷஹீதானேன். எனக் கூறுவார். அதற்கு அல்லாஹ் கூறுவான். நீ பொய் கூறி விட்டாய். நீ புத்திக் கூர்மையான மாவீரன் என (மக்களால்) புகழப்படுவதற்காகவே போர் செய்தாய். அவ்வாறு உன்னை உலகில் புகழ்ந்து கூறப்பட்டுவிட்டது. பின்னர் அல்லாஹ் உத்தரவிடுவான். அவரை முகம் குப்புற இழுத்துச் செல்லப்பட்டு நரகில் தள்ளப்படும்.

பிறகு கல்வியைக் கற்று கற்றுத்தந்து குர்ஆனை ஓதிய அறிஞரின் விஷயத்தில் தீர்ப்புச் செய்யப்படும். அவர் கொண்டு வரப்படுவார். அவருக்குத் தான் செய்த (கொடுத்த) அருட்கொடைகளை அல்லாஹ் எடுத்துரைப்பான். அவற்றை அவர் புரிந்து கொள்வார். அவற்றின் விஷயத்தில் (நமக்கு நன்றி செலுத்த) நீ என்ன அமல் செய்தாய்? என அல்லாஹ் கேட்பான். அதற்கவர் நான் கல்வியைக் கற்று மற்றவருக்குக் கற்றுக் கொடுத்தேன். உனக்காக குர்ஆனை ஓதினேன். எனக் கூறுவார். அதற்கு அல்லாஹ் நீ பொய் கூறிவிட்டாய் நீ அறிஞன் எனப் புகழப்பட் வேண்டும் எனக் கல்வியைக் கற்றாய் காரீ (குர்ஆன் ஓதுபவர்) எனப் புகழப்பட குர்ஆனை ஓதினாய் எனக் கூறுவான் பின்னர் அல்லாஹ் உத்தரவிடுவான் அவரை முகங்குப்புற இழுத்துச் செல்லப்பட்டு நரகில் தள்ளப்படும்.

பின்னர் தீர்ப்பளிக்கப்படுபவர் அல்லாஹ் விஸ்தீரணமான அனைத்து வகைச் செல்வங்களையும் வழங்கியிருந்த மனிதராவார். அவர் கொண்டு வரப்படுவார். அவருக்குத் தான் செய்த (கொடுத்த) அருட்கொடைகளை அல்லாஹ் எடுத்துரைப்பான். அவரும் அவற்றைப் புரிந்து கொள்வார். நீ அவற்றின் விஷயத்தில் (நமக்கு நன்றி செலுத்த) என்ன அமல் செய்தாய்? என்று அல்லாஹ் கேட்பான் அதற்கவர் என் செல்வத்தை நீ விரும்பும் எந்த வழியிலும் உனக்காகச் செலவழிக்காமல் நான் விட்டு வைக்கவில்லை என்று கூறுவார். அதற்கு அல்லாஹ் நீ பொய் கூறிவிட்டாய். கொடையாளி என உன்னைப் புகழப்படுவதற்காகச் செலவு செய்தாய். அவ்வாறு உன்னைப் புகழப்பட்டுவிட்டது என்று கூறுவான் பின்னர் அல்லாஹ் உத்தரவிடுவான். அவரை முகங்குப்புற இழுத்துச் செல்லப்பட்டு நரகில் தள்ளப்படும். நூல். புகாரி (1617)

5 அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள். நபி(ஸல்) அவர்கள் நவின்றார்கள் மக்களைக் கனிமச் சுரங்கங்களாக நீங்கள் பெற்றுக் கொள்கிறீர்கள். அவர்களின் அறியாமைக் காலத்தில் சிறந்தவர்கள் அறிவு ஞானம்பெற்றால் இஸ்லாத்திலும் சிறந்தவர்களே! இந்தத் தீனின் விஷயத்தில் மக்களில் சிறந்தவர்கள் அந்த அறியாமைக் காலத்தைக் கடுமையாக வெறுப்பவர்களாகப் பெற்றுக் கொள்கிறீர்கள். இருமுகமுடையவரை மக்களில் கெட்டவராக நீங்கள் பெற்றுக் கொள்கிறீர்கள். அவர் எத்தகையவரென்றால் இவர்களிடம் ஒரு முகத்தைக் கொண்டு வருவார். அவர்களிடம் வேறொரு முகத்தைக் கொண்டு செல்வார். (இரு இடங்களில் இருவிதமாகப் பேசுவார். உண்மையையும் மனச்சாட்சியையும் பேணமாட்டார்) நூல். புகாரி, முஸ்லிம் (1540). நூல். இப்னுமாஜா

சிறிய அளவு நயவஞ்சகமும் இணைவைப்பாகும் அறிவிப்பவர். முஆத் (ரலி)

## 6. பொறாமைப் படுதல்

பொறாமைக்காரன் பொறாமை கொள்ளும் போதுண்டாகும் தீங்கை விட்டும் (காவல் தேடுகிறேன்). (113:5)

ஹதீஸ்கள்.

1. உறவை முறிக்காதீர்கள் முகத்தை திருப்பிக் கொள்ளாதீர்கள். பகைமை கொள்ளாதீர்கள், பொறாமைக் கொள்ளாதீர்கள் அல்லாஹ்வின் அடியார்களாகவும் சகோதரர்களாகவும் ஆகிவிடுங்கள். ஒரு முஸ்லிம் தம் சகோதரரை 3 நாட்களுக்கு மேல் வெறுக்கக் கூடாது. நூல். திர்மிதி (2000) அறிவிப்பவர். அனஸ் (ரலி)

2. ஒரு மனிதனுக்கு அல்லாஹ் செல்வத்தை வழங்கி அதை அவர் இரவுபகலாக நல்வழியில் செலவு செய்கிறார். இன்னொருவருக்கு அல்லாஹ் அறிவை வழங்கினான். அவர் இரவு பகலாய் குர்ஆனை ஓதி நின்று வணங்குகிறார். இவ்விருவரைத் தவிர வேறு எவர்மீதும் பொறாமை கொள்ளலாகாது. நூல். திர்மிதி (2001) அறிவிப்பவர். இப்னு உமர் (ரலி)

3. பொறாமை பற்றி உங்களுக்கு எச்சரிக்கிறேன். நிச்சயமாக பொறாமை நெருப்பு விறகைத் தின்பது போல நன்மைகளைத் தின்று விடும் அல்லது காய்ந்த புல்லை நெருப்பு தின்பது போல் நன்மைகளைத் தின்றுவிடும். நூல். அபூதாவூத் (1569) அறிவிப்பவர். அபூஹுரைரா (ரலி)

4. நபி(ஸல்) அவர்கள் நவின்றதாக ஹஜ்ரத் அனஸ் (ரலி) அறிவிக்கிறார்கள். ஒருவருக்கொருவர் உறவைத்துண்டித்துக் கொள்ளாதீர்கள். ஒருவருக்கொருவர் விரோதம் பாராட்டாதீர்கள் ஒருவர் மற்றவர் மீது பொறாமை கொள்ளாதீர்கள்.

அல்லாஹ்வின் அடியார்களே! நீங்கள் சகோதரர்களாக ஆகிவிடுங்கள். தம் சகோதரரை மூன்று தினங்களுக்கு மேல் வெறுத்திருப்பது ஒரு முஸ்லிமுக்கு ஆகமானதல்ல.. நூல். புகாரி, முஸ்லிம் (1591)

## 7. பெருமையடித்தல்

“(பெருமையோடு) உன் முகத்தை மனிதர்களை விட்டும் திருப்பிக் கொள்ளாதே! பூமியில் பெருமையாகவும் நடக்காதே! அகப்பெருமைக்காரர், ஆணவங் கொண்டோர் எவரையும் நிச்சயமாக அல்லாஹ் நேசிக்க மாட்டான். (31:18)

இதிலிருந்து நீ இறங்கி விடு. நீ பெருமை கொள்வதற்கு இங்கு இடமில்லை. ஆதலால் (இங்கிருந்து) நீ வெளியேறு நிச்சயமாக நீ சிறுமை அடைந்தோரில் ஒருவனாகி விட்டாய் என்று (அல்லாஹ்) கூறினான். (7:13)

எவ்வித நியாயமுமின்றி, பூமியில் பெருமையடித்து நடப்பவர்களை, என் கட்டளைகளை விட்டும் திருப்பி வைத்து விடுவேன் அவர்கள் எல்லா அத்தாட்சிகளையும் கண்ட போதிலும் அவற்றை நம்ப மாட்டார்கள் அவர்கள் நேர் வழியைக் கண்டால் அதனைத் (தங்களுக்குரிய) வழியென ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் - ஆனால் தவறான வழியைக் கண்டால், அதனை(த் தங்களுக்கு நேர்) வழியென எடுத்துக்

கொள்வார்கள் ஏனெனில் அவர்கள் நம் அத்தாட்சிகளைப் பொய்யெனக் கூறினார்கள். இன்னும் அவற்றைப் புறக்கணித்தும் இருந்தார்கள். (7:146)

மேலும், நீர் பூமியில் பெருமையாய் நடக்க வேண்டாம் (ஏனென்றால்) நிச்சயமாக நீர் பூமியைப் பிளந்துவிட முடியாது மலையின் உச்சி(யளவு)க்கு உயர்ந்து விடவும் முடியாது. (17:37)

46:20 அன்றியும் (நரக) நெருப்பின் முன் நிராகரிப்பவர்கள் கொண்டுவரப்படும் நாளில், "உங்கள் உலக வாழ்க்கையின் போது உங்களுக்குக் கிடைத்திருந்த மணமான பொருட்களையெல்லாம், வீண் செலவு செய்து, (உலக) இன்பம் தேடினீர்கள், "ஆகவே நீங்கள் பூமியில் அநியாயமாகப் பெருமையடித்துக் கொண்டும், வரம்பு மீறி (வாழ்ந்து) கொண்டும் இருந்த காரணத்தால், இழிவு தரும் வேதனையை இன்று நீங்கள் கூலியாகக் கொடுக்கப்படுகிறீர்கள்" (என்று அவர்களுக்குக் கூறப்படும்).

ஹதீஸ்கள்.

1. நான் உங்களுக்கு நரகவாசிகளை அறிவித்துத் தரட்டுமா? என நபி(ஸல்) ஒரு முறை கேட்டார்கள். அவர்கள் (நரகவாசிகள்) வெறுப்பு காட்டக் கூடிய கடினத் தன்மையுடைய கஞ்சத்தனமுள்ள, பெருமையடிப்பவருமாவார். எனக்கூறினார்கள். நூல். புகாரி (614) அறிவிப்பவர். ஹாரிஸா பின் வஹப் (ரலி)

2. அல்லாஹ் கூறுகிறான் கண்ணியம் என் வேட்டியாகும். பெருமை எனது மேலாடையாகும் இவ்விரண்டில் எதையேனும் என்னிடத்தில் ஒருவர் போட்டி போட்டால் அவனை நான் வேதனையில் ஆழ்த்துவேன். நூல். முஸ்லிம் (618) அறிவிப்பவர். அபூஹுரைரா (ரலி)

3. ஒரு மனிதன் பெருமையடித்துக் கொண்டே செல்கிறான் என்றால் அவனை அடக்கியாலும் அக்கிரமக்காரர்களின் கூட்டத்தில் எழுதப்படும் அவர்களின் வேதனை இவனையும் அடையும். நூல். திர்மிதி (620) அறிவிப்பவர். ஸலமா பின் அல் அக்வா (ரலி)

4. நபி(ஸல்) அவர்கள் நவின்றதாக அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அறிவிக்கிறார்கள். யாருடைய உள்ளத்தில் அனுவளவு பெருமை இருக்கிறதோ அவர் சுவர்க்கத்தில் நுழையமாட்டார். அப்பொழுது ஒரு தோழர் (யாரஸூலல்லாஹ்!) ஒரு மனிதர் தம் ஆடை அழகாக இருக்க வேண்டுமென்றும் தம் காலணி அழகாக இருக்க வேண்டுமென்றும் ஆசைப்படுகிறார். (இது பெருமையாகாதா?) எனக் கேட்டார். அதற்கு நபி(ஸல்) அவர்கள் நிச்சயமாக அல்லாஹ் அழகானவன் அவன் அழகை விரும்புகிறான். எனினும் பெருமையென்பது சத்தியத்தை மறுப்பதும் மக்களை (அடுத்தவர்களை) இழிவாக எண்ணுவதுமாகும்! எனக் கூறினார்கள். நூல். முஸ்லிம் (1575)

5 இயாழ் பின் ஹிமார் (ரலி) அறிவிக்கிறார்கள். நீங்கள் பணிவைக் கடைபிடியுங்கள்! ஒருவர் மீது ஒருவர் பெருமையடிக்க வேண்டாம்! ஒரவருக்கொருவர் அநியாயம் செய்ய வேண்டாம்! என அல்லாஹ் எனக்கு வஹி அனுப்பி இருக்கிறான் என மாநபி(ஸல்) கூறினார்கள். நூல். முஸ்லிம் (602)

7. எவர் உள்ளத்தில் கடுகளவு பெருமை உள்ளதோ அவர் சுவனத்தில் நுழைய மாட்டார். எவர் உள்ளத்தில் கடுகளவு ஈமான் உள்ளதோ அவர் நரகில் நுழையமாட்டார். என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அதற்கு ஒருவர் என் ஆடை அழகாக இருப்பதையும் என் செருப்புகள் அழகுடன் இருப்பதையும் நான் விரும்புகிறேனே இது பெருமையாகுமா? எனவினவ நபி(ஸல்) அல்லாஹ் அழகை விரும்புகிறான் பெருமை என்பது சத்தியத்தை மறுப்பதும் மக்களை இழிவாகக் கருதுவதுமாகும். நூல். திர்மிதி (2067) அறிவிப்பவர். இப்னு மஸ்ஊது (ரலி)

## 8. வாக்குறுதிக்கு மாறு, மோசடி செய்தல்

அநாதைகள் பிராயமடையும் வரை, (அவர்களின் பொறுப்பேற்றிருக்கும்) நீங்கள், நியாயமான முறையிலன்றி அவர்களுடைய பொருளை நெருங்காதீர்கள், இன்னும் (நீங்கள் அல்லாஹ்விடமோ, மனிதர்களிடமோ கொடுத்த) வாக்குறுதியை நிறை வேற்றுங்கள் நிச்சயமாக (அவ்) வாக்குறுதி (பற்றித் தீர்ப்பு நாளில் உங்களிடம்) விசாரிக்கப்படும். (17:34)

அன்றியும், உங்களுக்கிடையில் ஒருவர் மற்றவரின் பொருளைத் தவறான முறையில் சாப்பிடாதீர்கள் மேலும், நீங்கள் அறிந்து கொண்டே பிற மக்களின் பொருள்களிலிருந்து (எந்த) ஒரு பகுதியையும், அநியாயமாகத் தின்பதற்காக அதிகாரிகளிடம் (இலஞ்சம் கொடுக்க) நெருங்காதீர்கள். (2:188)

நம்பிக்கைக் கொண்டவர்களே! உங்களில் ஒருவருக்கொருவர் பொருந்திக் கொள்ளும் முறையில் ஏற்படுகிற வர்த்தகம் அல்லாமல், ஒருவர் மற்றொருவரின் பொருட்களை தவறான முறையில் உண்ணாதீர்கள் நீங்கள் உங்களையே கொலைசெய்து கொள்ளாதீர்கள் - நிச்சயமாக அல்லாஹ் உங்களிடம் மிக்க கருணையுடையவனாக இருக்கின்றான். (4:29)

ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கும், (அவனுடைய) தூதருக்கும் மோசம் செய்யாதீர்கள் நீங்கள் அறிந்து கொண்டே, உங்களிடமுள்ள அமானிதப் பொருட்களிலும் மோசம் செய்யாதீர்கள். (8:27)

இன்னும், நீங்கள் அல்லாஹ்வின் பெயரால் செய்யும் உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள் அல்லாஹ்வை சாட்க்ஷியாக வைத்துச் சத்தியம் செய்து, அதனை உறுதிப் படுத்திய பின்னர், அச்சத்தியத்தை முறிக்காதீர்கள் - நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதை நன்கறிவான். (16:91)

ஹதீஸ்கள்.

1. நயவஞ்சகனின் அடையாளங்கள் மூன்றாகும். 1. அவன் பேசினால் பொய்யுரைப்பான். 2. வாக்குறுதி அளித்தால் மாறு செய்வான். 3. நம்பினால் மோசம் செய்வான் நூல். புகாரி, முஸ்லிம் (199) அறிவிப்பவர். அபூஹுரைரா (ரலி)

2. எந்த ஒரு அடியாருக்கு அல்லாஹ் ஒரு சமுதாயத்தின் பொறுப்பை வழங்கி அவர் அப்பொறுப்பில் தம் சமுதாயத்தார்க்கு மோசம் செய்த நிலையில் மரணிப்பாராயின் அவர் மீது அல்லாஹ் சுவனத்தை ஹராமாக்கிவிடுகிறான். நூல். புகாரி (654) அல்லாஹ் அறிவிப்பவர். அபூயஃலா (ரலி)

3. நபி(ஸல்) அவர்கள் நவின்றதாக் அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள். ஒரு பொருளை வாங்கும் எண்ணமில்லாமல் (பிறரை ஏமாற்றுவதற்காக) ஒருவருக் கொருவர் பொருளின் விலையைக் கூட்டி விடாதீர்கள். நூல். புகாரி, முஸ்லிம் (1580)

4. அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அனஸ் (ரலி) ஆகிய மூன்று நபித்தோழர்கள் அறிவிக்கிறார்கள். கியாமத் நாளில் ஒருவொரு மோசக்காரனுக்கும் ஒரு கொடி இருக்கும். (அதனைக் கொண்டு மக்கள் அவனை அறிந்து கொள்வர்) இது இன்னாரின் மோசடி எனக் கூறப்படும். நூல். புகாரி, முஸ்லிம் (1585)

5. நபி(ஸல்) அவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள். அல்லாஹு தஆலா கூறுகிறான் மூன்று பேர்களுக்காக கியாமத் நாளில் நானே அவர்களிடம் வழக்காடுவேன். அவர்களாவர். 1. என்னைப் பொருட்டாக வைத்து (என்பெயரால்) ஒப்பந்தம் செய்து கொடுத்தவன். பின்னர் அதனை அவன் நிறைவேற்றவில்லை. 2. சுதந்திரமான மனிதனைப் பிடித்து இவன் அடிமை என்று கூறி விற்று

அந்தக் கிரயப் பணத்தைச் சாப்பிட்டவன். 3. ஒரு வேலைக்காரனிடம், வேலையைப் பரிபூரணமாக வாங்கிக் கொண்டு அவனுக்குக் கூலியைக் கொடுக்காதவன். நூல். புகாரி, முஸ்லிம் (1587)

## 9. சூனியம், ஜோஸ்யம், மாந்த்ரீகம்

---

அவர்கள் ஸு லைமானின் ஆட்சிக்கு எதிராக ஷைத்தான்கள் ஓதியவற்றையே பின்பற்றினார்கள் ஆனால் ஸு லைமான் ஒருபோதும் நிராகரித்தவர் அல்லர் ஷைத்தான்கள் தாம் நிராகரிப்பவர்கள் அவர்கள்தாம் மனிதர்களுக்குச் சூனியத்தைக் கற்றுக்கொடுத்தார்கள் இன்னும், பாபில் (பாபிலோன் என்னும் ஊரில்) ஹாருத், மாருத் என்ற இரண்டு மலக்குகளுக்கு இறக்கப்பட்டதையும் (தவறான வழியில் பிரயோகிக்கக் கற்றுக்கொடுத்தார்கள்). ஆனால் அவர்கள் (மலக்குகள்) இருவரும் “நிச்சயமாக நாங்கள் சோதனையாக இருக்கிறோம் (இதைக் கற்று) நீங்கள் நிராகரிக்கும் கா∴பிர்கள் ஆகிவிடாதீர்கள்” என்று சொல்லி எச்சரிக்காத வரையில், எவருக்கும் இ(ந்த சூனியத்)தைக் கற்றுக் கொடுக்கவில்லை அப்படியிருந்தும் கணவன் - மனைவியிடையே பிரிவை உண்டாக்கும் செயலை அவர்களிடமிருந்து கற்றுக்கொண்டார்கள். எனினும் அல்லாஹ்வின் கட்டளையின்றி அவர்கள் எவருக்கும் எத்தகைய தீங்கும் இதன் மூலம் இழைக்க முடியாது தங்களுக்குத் தீங்கிழைப்பதையும், எந்த வித நன்மையும் தராததையுமே - கற்றுக் கொண்டார்கள். (சூனியத்தை) விலை கொடுத்து வாங்கிக் கொண்டவர்களுக்கு, மறுமையில் யாதொரு பாக்கியமும் இல்லை என்பதை அவர்கள் நன்கறிந்துள்ளார்கள். அவர்கள் தங்கள் ஆத்மாக்களை விற்றுப்பெற்றுக்கொண்டது கெட்டதாகும். இதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டாமா? (2:102)

ஹதீஸ்கள்.

1. நபி(ஸல்) அவர்கள் நவின்றதாக அபூ ஹு ரைரா (ரலி) அறிவிக்கிறார்கள். உங்களை அழித்து நாசமாக்கக் கூடிய ஏழு விஷயங்களையும் விட்டும் விலகிக் கொள்ளுங்கள்! அப்பொழுது தோழர்கள் அவை யாவை யாரஸு லல்லாஹ்! எனக் கேட்டனர். அதற்கு நபி(ஸல்) அவர்கள் 1.அல்லாஹ்வுக்கு இணைவைப்பது. 2.சூனியம் செய்வது. 3.அல்லாஹ் விலக்கியுள்ள உயிரைக் கொல்வது. 4.வட்டியை உண்பது 5.அனாதைகளின் பொருளை உண்பது 6.போருடைய நாளில் புறமுதுகுக் காட்டிச் செல்வது. 7.அப்பாவியான மு∴மினான பத்தினிப் பெண் மீது அவதூறு கூறுவது ஆகியவையாகும் எனக் கூறினார்கள் . நூல். புகாரி, முஸ்லிம் (1614)

2. ஸபியா பின்த் அபீ உபைத் என்ற பெண்மணி நபி(ஸல்) அவர்களின் மனைவிமார்களில் ஒருவரின் வாயிலாக அறிவிக்கிறார்கள். நபி(ஸல்) கூறினார்கள். யார் குறி சொல்பவனிடம் வந்து அவனிடம் ஒரு விஷயத்தைப் பற்றிக் கேட்டு அவன் கூறுவதை உண்மையென ஒப்புக் கொள்வாரோ அவரின் நாற்பது நாட்களின் தொழுகைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. நூல். முஸ்லிம் (1669)

3. நட்சத்திரக் கலையை யார் கற்கிறாரோ அவர் சூனியத்தின் ஒரு பிரிவை எடுத்துக் கொண்டவராவார். தான் அதிகப்படுத்த விரும்புவதை அவர் அதில் அதிகப்படுத்திவிடுவார். நூல். அபூதாவூத் (1671) அறிவிப்பவர். இப்னுஅப்பாஸ் (ரலி)

4. யார் சூடுபோட்டு கொள்கிறாரோ அல்லது மந்திரிக்கிறாரோ அவர் அல்லாஹ் மீதுள்ள உறுதியான நம்பிக்கையில் இருந்து நீங்கிவிட்டார். நூல். திர்மிதி (2131) அறிவிப்பவர். முகிவி பின் ஹு ∴பா (ரலி)

5. உடல் முழவதும் சிவந்திடும் நோய் கண்டிருந்த அப்துல்லாஹ் பின் உகைம் (ரலி) அவர்கள் நான் நோய் விசாரிக்கச் சென்று தாயத்து போன்ற எதையேனும் நீங்கள் தொங்கவிட்டுக் கொள்ளலாமே

எனக் கூறிய போது அவர்கள் மரணம் அதைவிட சமீபத்தில் உள்ளது. தயாத்துக்கள் எதையும் தடுத்து விடாது என்று கூறிவிட்டு இறை உதவியின்று தாயத்தின் பொறுப்பில் விடப்படுவார் என நபி(ஸல்) கூறியதாக குறிப்பிட்டார். நூல். திர்மிதி. (2152) அறிவிப்பவர். உக்பா பின் ஆபிர் (ரலி)

6. நாய் விற்ற காசு, விபச்சாரியின் விபச்சார கூலி, ஜோதிடம் கூறியவருக்கு கிடைக்கும் தட்சனை ஆகியவற்றை உபயோகிக்க நபி(ஸல்) தடைச்செய்தார்கள். நூல். திர்மிதி (2151) அறிவிப்பவர். அபூ மஸ்ஊது (ரலி)

## 10. வட்டி உண்ணுதல்

---

அல்லாஹ் வட்டியை (அதில் எந்த பரக்கத்தும் இல்லாமல்) அழித்து விடுவான் இன்னும் தான் தர்மங்களை (பரக்கத்துகளைக் கொண்டு) பெருகச் செய்வான் (தன் கட்டளையை) நிராகரித்துக் கொண்டிருக்கும் பாவிகள் எவரையும் அல்லாஹ் நேசிப்பதில்லை. (2:276)

ஈமான் கொண்டோரே! இரட்டித்துக் கொண்டே அதிகரித்த நிலையில் வட்டி (வாங்கித்) தின்னாதீர்கள் இன்னும் நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சி (இதைத் தவிர்த்துக் கொண்டால்) வெற்றியடைவீர்கள். (3:130)

வட்டி வாங்குவது அவர்களுக்குத் தடை செய்யப்பட்டிருந்தும், அவர்கள் அதை வாங்கி வந்ததன் (காரணமாகவும்,) தவறான முறையில் அவர்கள் மக்களின் சொத்துகளை விழுங்கிக் கொண்டிருந்ததன் (காரணமாகவும், இவ்வாறு தண்டனை வழங்கினோம்), இவர்களில் காஃபிரானோருக்கு (மறுமையில்) நோவினை செய்யும் வேதனையையும் நாம் சித்தப்படுத்தியுள்ளோம். (4:161)

ஹதீஸ்கள்.

1. நபி(ஸல்) அவர்கள் நவின்றதாக அபூ ஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள். உங்களை அழித்து நாசமாக்கக் கூடிய ஏழு விஷயங்களை விட்டும் விலகிக் கொள்ளுங்கள்! என்றபோது தோழர்கள் அவை யாவை யாரஸூலல்லாஹ்! எனக் கேட்டனர். அதற்கு நபி(ஸல்) அவர்கள் 1. அல்லாஹ்வுக்கு இணைவைப்பது. 2. சூனியம் செய்வது. 3. அல்லாஹ் விலக்கியுள்ள உயிரைக் கொல்வது. 4. வட்டியை உண்பது 5. அனாதைகளின் பொருளை(அநியாயமாக) உண்பது 6. போருடைய நாளில் புறமுதுகுக் காட்டிச் செல்வது. 7. அப்பாவியான முஃமினான பத்தினிப்பெண் மீது அவதூறு கூறுவது ஆகியவையாகும் எனப் பகர்ந்தார்கள். நூல். புகாரி, முஸ்லிம் (1614)

2. வட்டி வாங்குபவன், கொடுப்பவன், சாட்சியாளன், எழுதுபவன் ஆகியோரை நபி(ஸல்) அவர்கள் சபித்துள்ளார்கள். நூல். திர்மிதி அறிவிப்பவர். இப்னு மஸ்ஊத் (ரலி)

3. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் மிஃராஜில் இரத்த ஆற்றில் ஒரு மனிதன் கரையை நோக்கி நீந்திவரும் போது கரையில் நிற்கும் மற்றொருவன் அவன் முகத்தில் கல்லால்அடித்து மீண்டும் ஆற்றில் தள்ளியதை நான் பார்த்தேன். இது தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. நான் ஜிப்ரீல் (அலை) அவர்களிடம் இது யார்? என்று வினவிபோது இவர் (என் உம்மத்தில) வட்டி உண்டவர் எனப் பதிலளித்தார். நூல். புகாரி அறிவிப்பவர். ஸமுரா பின் ஜூன்துப் (ரலி)

4. வட்டி உண்பவன் மறுமை நாளில் பைத்தியம் பிடித்தவன் போல் எழுப்பப்படுவான். நூல். அஹ்மத் அறிவிப்பவர். அவ்ஃப் பின் மாலிக்

5. வட்டி உண்போர், மதுவருந்துவோர், விபச்சாரம் புரிவோர் அதிகரிப்பது மறுமை நாளின் அறிகுறியாகும். நூல். தப்ராணி அறிவிப்பவர். இப்னு மஸ்ஊத் (ரலி)

## 11. மார்க்கத்தில் புதிதான செயல்களைப் புகுத்துதல்

நிச்சயமாக இதுவே என்னுடைய நேரான வழியாகும் ஆகவே இதனையே பின்பற்றுங்கள் - இதர வழிகளை நீங்கள் பின்பற்ற வேண்டாம் - அவை உங்களை அவனுடைய வழியைவிட்டுப் பிரித்துவிடும் நீங்கள் (நேர் வழியைப் பின்பற்றி) பயபக்தியுடையவர்களாக இருப்பதற்கு இவ்வாறு அவன் உங்களுக்கு போதிக்கிறான். (6:153)

... (நம்முடைய) தூதர் உங்களுக்கு எதைக்கொடுத்தாரோ அதை நீங்கள் (மனமொப்பி) எடுத்துக்கொள்ளுங்கள். அவர் எதனை விட்டும் உங்களைத் தடுத்தாரோ அதிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள் மேலும் அல்லாஹ்வுக்கு நீங்கள் பயந்துக்கொள்ளுங்கள் நிச்சயமாக அல்லாஹ் தண்டிப்பதில் மிக்க கடினமானவன். (59:7)

(நபியே!) நீர் கூறும் "நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பீர்களானால், என்னைப் பின் பற்றுங்கள் அல்லாஹ் உங்களை நேசிப்பான் உங்கள் பாவங்களை உங்களுக்காக மன்னிப்பான் மேலும், அல்லாஹ் மன்னிப்பவனாகவும், மிக்க கருணை உடையவனாகவும் இருக்கின்றான். (3:31)

ஹதீஸ்கள்.

1. இம்மார்க்கத்தில் அதில் இல்லாத ஒரு விஷயத்தை எவரேனும் புதிதாக உண்டாக்கு வாரேயானால் அது மறுக்கப்பட வேண்டியதாகும்

மற்றொரு அறிவிப்பில் எக்காரியத்தில் நமது உத்திரவு இல்லையோ அதை எவர் செய்தாலும் அது நிராகரிக்கப்பட வேண்டியதாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் நூல். புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். ஆயிஷா (ரலி)

2. மார்க்கத்தில் புதுமையைப் புகுத்துபவனின் நோன்பு, ஹஜ், கடமையான மற்றும் மேலதிகமான தொழுகை ஆகியவற்றை அல்லாஹ் ஏற்றுக்கொள்ள மாட்டான். மாவிலிருந்து முடி நீக்கப் படுவதுபோல் இஸ்லாத்திலிருந்தும் அவன் வெளியேறிவிடுவான் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல். இப்னுமாஜா அறிவிப்பவர். ஹுதைஃபா (ரலி)

3. மார்க்கத்தில் புகுத்தப்படும் ஒவ்வொரு புதிய செயலும் வழிகேடாகும் ஒவ்வொரு வழி கேடும் நரகுக்கு இழுத்துச் செல்லும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல். அபூதாவூத், திர்மிதி அறிவிப்பவர். அர்பஸ் பின் ஸர்யா (ரலி)

4. மார்க்கத்தில் புதிததாக நுழைக்கும் நூதன செயலைச் செய்யும் அம்மக்களை அல்லாஹ் நேர் வழியை விட்டு அகன்று செல்லவும் அல்லாஹ்வின் அருளிலிருந்தும் நேசப் பார்வையிலிருந்தும் தூரமாக்குகிறான் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல். அஹ்மத் அறிவிப்பவர். குபைப் பின் அல் ஹாரிஸ் (ரலி)

## 12. அனாதைகளின் சொத்தை விழுங்குதல்

நிச்சயமாக, யார் அநாதைகளின் சொத்துக்களை அநியாயமாக விழுங்குகிறார்களோ அவர்கள் தங்கள் வயிறுகளில் விழுங்குவதெல்லாம் நெருப்பைத்தான் - இன்னும் அவர்கள் (மறுமையில்) கொழுந்து விட்டெறியும் (நரக) நெருப்பிலேயே புகுவார்கள். (4:10)

அநாதைகள் பிராயமடையும் வரை, (அவர்களின் பொறுப்பேற்றிருக்கும்) நீங்கள், நியாயமான முறையிலன்றி அவர்களுடைய பொருளை நெருங்காதீர்கள், இன்னும் (நீங்கள் அல்லாஹ்விடமோ, மனிதர்களிடமோ கொடுத்த) வாக்குறுதியை நிறை வேற்றுங்கள் நிச்சயமாக (அவ்) வாக்குறுதி (பற்றித் தீர்ப்பு நாளில் உங்களிடம்) விசாரிக்கப்படும். (17:34)

ஹதீஸ்கள்.

1. நானும் அனாதையைப் பொறுப் பேற்று ஆதரித்து வளர்த்த(அ)வரும் சுவர்க்கத்தில் இவ்வாறு இருப்போம் என நபி(ஸல்) அவர்கள் கூறிவிட்டுத் தங்களது ஆட்காட்டி (கலிமா) விரலையும் நடுவிரலையும் சற்று விரித்தவர்களாகச் சுட்டிக் காட்டினார்கள். நூல். புகாரி அறிவிப்பவர். ஸஹ்ல் பின் ஸஃது (ரலி)

2. அனாதைகளின் சொத்தை விழுங்கியோர் கியாம நாளில் கப்ரில் இருந்து எழுப்பப்படும்போது தங்கள் வாய்களிலிருந்து நெருப்பை உமிழ்ந்தவர்களாக வருவார்கள். நூல். முஸ்லிம் அறிவிப்பவர். அபூஹுரைரா (ரலி

3. நபி(ஸல்) அவர்கள் மிஃராஜ் இரவில் சில மனிதர்கள் கற்களை உண்டு அதைத் தம் பின்புறங்களின் வழியாக வெளிபோற்று வதைக் கண்டநான் ஜிப்ரயீல் (அலை) அவர்களிடம் இவர்கள் யார்? என்று வினவ இவர்கள் தாம் அனாதைகளின் சொத்தை உண்டவர்கள் எனக் கூறப்பட்டது. நூல். முஸ்லிம் அறிவிப்பவர். அபூஹுரைரா(ரலி)

4. அனாதையின் சொத்தை முறையின்றி அனுபவிப்போருக்கு அல்லாஹ் சுவனத்திற்குள் நுழைவதை தடைசெய்து விட்டான். நூல். ஹாக்கிம் அறிவிப்பவர். அபூஹுரைரா(ரலி)

## 13. பொய்சத்தியம், பொய்சாட்சி. கூறுதல்

நீங்கள் உங்கள் சத்தியங்களை உங்களுக்கிடையில் (சதி, துரோகம்) ஆகியவற்றுக்குக் காரணமாக ஆக்கிக் கொள்ளாதீர்கள் (அவ்வாறு செய்வதால்) நிலை பெற்ற (உங்களுடைய) பாதம் சறுகி விடும் அன்றியும், நீங்கள் அல்லாஹ்வின் பாதையை விட்டும் (மக்களைத்) தடுத்துக்கொண்டிருந்த காரணத்தால், (இம்மையில் பெருந்) துன்பத்தை அனுபவிக்க நேரிடும் (மறுமையிலும்) உங்களுக்குக் கடுமையான வேதனையும் உண்டு. (16:94)

முஃமின்களே! நியாயத்தை நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள உறுதியான சாட்சியாக இருங்கள், எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள் இதுவே (தக்வாவுக்கு) - பயபக்திக்கு மிக நெருக்கமாகும் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை(யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான். (5:8)

முஃமின்களே! நீங்கள் நீதியின்மீது நிலைத்திருப்பவர்களாகவும், உங்களுக்கோ அல்லது (உங்கள்) பெற்றோருக்கோ அல்லது நெருங்கிய உறவினருக்கோ விரோதமாக இருப்பினும் அல்லாஹ்வுக்காகவே சாட்சி கூறுபவர்களாகவும் இருங்கள் (நீங்கள் யாருக்காக சாட்சியம் கூறுகிறீர்களோ) அவர்கள்

செல்வந்தர்களாக இருந்தாலும் ஏழைகளாக இருந்தாலும் (உண்மையான சாட்சியம் கூறுங்கள்) ஏனெனில் அல்லாஹ் அவ்விருவரையும் காப்பதற்கு அருகதையுடையவன் எனவே நியாயம் வழங்குவதில் மன இச்சையைப் பின்பற்றி விடாதீர்கள் மேலும் நீங்கள் மாற்றிக் கூறினாலும் அல்லது (சாட்சி கூறுவதைப்) புறக்கணித்தாலும், நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதை யெல்லாம் நன்கு அறிந்தவனாகவே இருக்கின்றான். (4:135)

ஹதீஸ்கள்.

1. அபூபகரா நுபைவு பின் ஹாரிஸ் (ரலி) அறிவிக்கிறார்கள் பாவங்களில் மிகப் பெரும் பாவம் எது என நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா? என அண்ணல் நபி(ஸல்) அவர்கள் மும்முறை கேட்டார்கள். நாங்கள் ஆம் (அறிவித்துத் தாருங்கள்) இறைத்தூதர் அவர்களே! என்று கூறினோம். இறைவனுக்கு இணைவைப்பதும், பெற்றோரை வேதனை செய்வதும் (பாவங்களில் மிக பெரும் பாவாமாகும்) எனக் கூறினார்கள்.

அப்போது அண்ணலார்(ஸல்)அவர்கள் சாய்ந்து உட்கார்ந்து இருந்தார்கள் பிறகு எழுந்து அமர்ந்து கூறினார்கள். அறிந்து கொள்ளுங்கள். பொய்யுரைப்பதும் பொய்ச் சாட்சி கூறுவதும் கூட (பாவங்களில் பேரும் பாவமாகும்) இதனை திரும்பத் திரும்பக் கூறினார்கள் எதுவரையெனில் அவர்கள் வாய் மூடினால் நலமாக இருக்குமே என்று நாங்கள் எண்ணும் வரை. நூல்கள். புகாரி, முஸ்லிம் (336)

2. நிச்சயமாக உண்மை நன்மையின் பக்கம் வழிகாட்டும். நிச்சயமாக நன்மை சுவனத்தின் பால் வழிகாட்டும். நிச்சயமாக ஒரு மனிதர் உண்மை பேசுகிறார் அவர் அல்லாஹ்விடம் உண்மையாளர் என்று எழுதப் படுகிறார். நிச்சயமகாப் பொய் பாவத்தின் பக்கம் வழிகாட்டும் பாவம் நரகின் பால் வழிகாட்டும். ஒரு மனிதர் பொய் பேசுகிறார். அவர் அல்லாஹ்விடம் பொய்யர் என்று எழுதப்படுகிறார். நூல். புகாரி, முஸ்லிம். அறிவிப்பவர். இப்னு மஸ்ஊத் (ரலி)

தனக்கு எவ்வித உரிமையுமின்றி பிற முஸ்லிம்களின் பொருளை ஒருவன் சத்தியம் செய்து உரிமை கொண்டாடுவானேயானால் கியாமநாளில் அவன் மீது அல்லாஹ் கோபமாய் இருக்கும் நிலையிலேயே சந்திப்பான். என்று கூறிய நபி(ஸல்) அவர்கள்.

3. யார் அல்லாஹ்விடத்தில் செய்த வாக்குறுதியையும் தம் சத்தியப்பிரமாணங்களையும் அற்ப விலைக்கு விற்கிறார்களோ, அவர்களுக்கு நிச்சயமாக மறுமையில் யாதொரு நற்பாக்கியமும் இல்லை அன்றியும், அல்லாஹ் அவர்களுடன் பேச மாட்டான் இன்னும் இறுதி நாளில் அவன் அவர்களை (கருணையுடன்) பார்க்கவும் மாட்டான் அவர்களைப்(பாவத்தைவிட்டுப்) பரிசுத்தமாக்கவும் மாட்டான் மேலும் அவர்களுக்கு நோவினைமிக்க வேதனையும் உண்டு.(3:77) என்ற குர்ஆனின் வசனத்தை ஓதினார்கள் நூல். புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். இப்னுமஸ்ஊத் (ரலி)

4. எவர் ஒரு முஸ்லிமின் உரிமையைத் தம் வலக்கரத்தில் எடுத்துக் கொள்கிறாரோ அவர் மீது நரகை அல்லாஹ் அவசியமாக்கி விட்டான். சுவனத்தை அவர் மீது ஹராமாக்கி விட்டான் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அதற்கு ஒருவர் அது ஒரு சிறிய பொருளாக இருந்தபோதிலுமா? யார சூலுல்லாஹ் என்று கேட்டார். ஆம் அது அராக் எனும் முள் மரத்தின் ஒரு குச்சியாக இருப்பினும் சரியே என நபி(ஸல்) கூறினார்கள். நூல். முஸ்லிம் அறிவிப்பவர். கியாஸ் (ரலி)

## 14. விபச்சாரம்

நீங்கள் விபச்சாரத்தை நெருங்காதீர்கள் நிச்சயமாக அது மானக்கேடானதாகும். மேலும், (வேறு கேடுகளின் பக்கம் இழுத்துச் செல்லும்) தீய வழியாகவும் இருக்கின்றது. (17:32)

(நபியே!) மு∴மின்களான ஆடவர்களுக்கு நீர்கூறுவீராக அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும் தங்கள் வெட்கத் தலங்களைப் பேணிக்காத்துக் கொள்ள வேண்டும் அது அவர்களுக்கு மிகப் பரிசுத்தமானதாகும் நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்பவற்றை நன்கு தெரிந்தவன். (24:30)

“உலகத்தார்களில் நீங்கள ஆடவர்களிடம் (கெட்ட நோக்கோடு) நெருங்குகின்றீர்களா?

“இன்னும், உங்கள் இறைவன் உங்களுக்காகப் படைத்துள்ள உங்கள் மனைவிமார்களை விட்டு விடுகிறீர்கள் இல்லை நீங்கள் வரம்பு கடந்த சமூகத்தாராக இருக்கின்றீர்கள்.” (26:165,166)

ஹதீஸ்கள்.

1. ஒரு ஆண் மற்றொரு ஆணின் மறைவிடத்தைப் பார்க்க மாட்டான். அதுபோன்றே ஒரு பெண் மற்றொரு பெண்ணின் மறைவிடத்தைப் பார்க்க மாட்டாள். ஒரு ஆண் ஓரே ஆடையில் மற்றொரு ஆணுடன் சேர்ந்திருக்க மாட்டான். ஒரு பெண் மற்றொரு பெண்ணுடன் ஓரே ஆடையில் சேர்ந்திருக்க மாட்டாள். நூல். முஸ்லிம் அறிவிப்பவர். அபூஸயீத் (ரலி)

2. ஆதமின் மகனுக்கு விபச்சாரத்தின் ஒரு பகுதி எழுதப்பட்டு விட்டது. சந்தேகத்துக்கு இடமின்றி அவன் அதனைப் பெற்றுக் கொள்வான். தவறானவற்றை தடுக்கப்பட்டதை பார்ப்பது இரண்டு கண்கள் செய்யும் விபச்சாரம், கேட்பது காதுகளின் விபச்சாரம், போசுவது நாவின் விபச்சாரம், பிடிப்பது கைகளின் விபச்சாரம், நடப்பது கால்களின் விபச்சாரம், ஆசைப்படுவது எண்ணுவது உள்ளத்தின் விபச்சாரம் மர்மஸ்தானம் அதனைப் பொய்ப்படுத்துகிறது அல்லது உண்மைப்படுத்துகிறது. நூல். புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். அபூஹுரைரா (ரலி)

3. நான் இச்சமுதாயத்தில் மிகவும் பயப்படுவது என்னவென்றால் லூத் (அலை) சமுதாயத்தவர்கள் செய்த செயல்களைத்தான் (ஆண் ஆணை ஒரினப்புணர்ச்சி செய்தல்) லூத் (அலை) அவர்களின் கூட்டத்தார் செய்த செயல்களை யார் செய்கிறாரோ அவர்களை அல்லாஹ் சபிக்கிறான் என மூன்று முறை நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல். அஹ்மத்

4. ஒரு விபச்சாரகன் விபச்சாரத்தின் போதும் ஒரு குடிகாரன் மதுவருந்தும் போதும் ஒரு திருடன் திருடும்போதும் மூ∴மினாக இருப்பதில்லை. அவனின் விசுவாசம் மேற்கூறிய தவறுகளைச் செய்யும் போது அவனை விட்டும் விலகி விடுகிறது. நூல். புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். அபூஹுரைரா (ரலி)

5. நபி(ஸல்)அவர்கள் ஒரு முறை தாம் கண்ட கனவைப் பற்றிக் கூறுகையில் வாய் ஒடுக்கமாக அடிப்பாகம் விரிந்த ஓர் அடுப்பில் நிர்வாணமான ஆண்களும் பெண்களும் தண்டிக்கப்பட்டதைக் கண்டதாகக் கூறினார்கள். வேதனை தாங்காமல் வாயின் மேற்பாகத்தினை அடைந்த அவர்கள் வெளியேற வியலாமல் மீண்டும் அடுப்பின் அடிப்பாகம் சென்று தண்டனைக்குள்ளாயினர். இவர்கள் தாம் என்னுடைய உம்மத்துக்ளில் விபச்சாரம் புரிந்தோர் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல். புகாரி அறிவிப்பவர். இப்னு உமர் (ரலி)

## 15. புறம், கோள், அவதூறு

முஃமின்களே! ஒரு சமூகத்தார் பிரிதொரு சமூகத்தாரைப் பரிகாசம் செய்ய வேண்டாம். ஏனெனில் (பரிகசிக்கப்படுவோர்), அவர்களைவிட மேலானவர்களாக இருக்கலாம் (அவ்வாறே) எந்தப் பெண்களும், மற்றெந்தப் பெண்களையும் (பரிகாசம் செய்ய வேண்டாம்) - ஏனெனில் இவர்கள் அவர்களை விட மேலானவர்களாக இருக்கலாம் இன்னும், உங்களில் ஒருவருக்கொருவர் பழித்துக் கொள்ளாதீர்கள், இன்னும் (உங்களில்) ஒருவரையொருவர் (தீய) பட்டப்பெயர்களால் அழைக்காதீர்கள் ஈமான் கொண்டபின் (அவ்வாறு தீய) பட்டப் பெயர் சூட்டுவது மிகக் கெட்டதாகும் எவர்கள் (இவற்றிலிருந்து) மீளவில்லையோ, அத்தகையவர்கள் அநியாயக்காரர்கள் ஆவார்கள்.

முஃமின்களே! (சந்தேகமான) பல எண்ணங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள் ஏனெனில் நிச்சயமாக எண்ணங்களில் சில பாவங்களாக இருக்கும் (பிறர் குறைகளை) நீங்கள் துருவித் துருவி ஆராய்ந்து கொண்டிராதீர்கள் அன்றியும், உங்களில் சிலர் சிலலைப் பற்றிப் புறம் பேசவேண்டாம், உங்களில் எவராவது தம்முடைய இறந்த சகோதரனின் மாமிசத்தைப் புசிக்க விரும்புவாரா? (இல்லை!) அதனை நீங்கள் வெறுப்பீர்கள். இன்னும், நீங்கள் அல்லாஹ்வை அஞ்சுங்கள். நிச்சயமாக பாவத்திலிருந்து மீள்வதை அல்லாஹ் ஏற்றுக் கொள்பவன் மிக்க கிருபை செய்பவன். (49:11,12)

(அத்தகையவன்) குறைகூறித்திரிபவன், கோள் சொல்லிக் கொண்டு நடப்பவன். (68:11)

குறை சொல்லிப் புறம் பேசித் திரியும் ஒவ்வொருவனுக்கும் கேடுதான். (104:1)

எவர்கள் முஃமினான ஒழுக்கமுள்ள, பேதை பெண்கள் மீது அவதூறு செய்கிறார்களோ, அவர்கள் நிச்சயமாக இம்மையிலும், மறுமையிலும் சபிக்கப்பட்டவர்கள் இன்னும் அவர்களுக்குக் கடுமையான வேதனையுமுண்டு. (24:23)

ஹதீஸ்கள்.

1. ஒருமுறை நபி(ஸல்) அவர்கள் தம் தோழர்களிடம் புறங்கூறுதல் என்றால் என்ன? என வினவினார்கள். அதற்குத் தோழர்கள் அல்லாஹ்வும் அவன் திருத்தூதரும் நன்கறிந்தவர்கள் எனக் கூறினர். நபி(ஸல்) அவர்கள் நீர் உம் சகோதரனைப் பற்றி அவர் வெறுப்பதைக் கூறுவதே புறங்கூறுதல் ஆகும். எனக் கூறினார்கள் அதற்கு ஒருவர் நான் கூறும் அவ்விஷயம் அவரிடம் இருந்தால் (எவ்வாறு ஆகும) என வினவியதற்கு நபி(ஸல்) அவர்கள் நீர் கூறும் விஷயம் அவரிடம் இருந்தால் நீர் அவரைப் புறங்கூறி விட்டீர் அவ்விஷயம் அவரிடம் இல்லையெனில் நிச்சயம் நீர் அவரைப் பற்றி அவதூறு கூறிவிட்டீர் எனப் பதில் கூறினார்கள். நூல். புகாரி அறிவிப்பவர். அபூஹுரைரா(ரலி)

2. அவதூறுகளில் மிகப் பெரியஅவதூறு தன் இரு கண்களும் பார்க்காததைப் பார்த்ததாகக் கூறுவதாகும். நூல். புகாரி அறிவிப்பவர். இப்னு உமர் (ரலி)

3. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என்னை மிஃராஜு க்கு வானின் பால் உயர்த்தபட்டபோது ஒரு கூட்டத்தார்க்கு அருகில் சென்றேன். அவர்களுக்குப் பித்தளையிலான நகங்கள் இருந்தன. அதை கொண்டு அவர்கள் தங்கள் முகங்களையும் நெஞ்சங்களையும் பிராண்டிக் கொண்டிருந்தனர். அதற்கு இவர்கள் யார்? என ஜிப்ரயீல் (அலை) அவர்களிடம் வினவிய போது அதற்கு இவர்கள்தான் பிற மக்களின் இறைச்சியை உண்டவர்கள் (புறங்கூறியவர்கள்) பிறரின் கண்ணியத்தைக் குலைப்பதில்ஈடுபட்டவர்கள் என பதிலளிக்கப்பட்டது. நூல். அபூதாவூத் அறிவிப்பவர். அனஸ் (ரலி)

4. நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள் கோள் சொல்பவன் சுவர்க்கத்தில் நுழையமாட்டான். நூல். புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். ஹுதைபா (ரலி)

5. நபி(ஸல்) அவர்கள் ஒரு கப்ருகளுக்க அருகில் நடந்தார்கள். அப்பொழுது கூறினார்கள் இவ்விரண்டு கப்ர்வாசிகளும் வேதனை செய்யப்படுகிறார்கள். இவர்கள் இரவரும் பெரும் பாவங்களுக்காக வேதனை

செய்யப்படவில்லை. எனினும் அது பெரும் பாவமாகும். அவ்விருவரில் ஒருவர் கோள் சொல்லிக் கொண்டு திரிந்தார். மற்றவர் சிறுநீர் கழித்து சுத்தம் செய்யாதவராய் இருந்தார். நூல். புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். இப்னு அப்பாஸ் (ரலி)

6. பொய் அவதூறு என்றால் என்ன? என்று நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா? என நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள் அது மக்களுக்கு மத்தியில் கோள் சொல்வதாகும் எனக் கூறினார்கள். நூல். முஸ்லிம் அறிவிப்பவர். இப்னு மஸ்ஊத் (ரலி)

## 16. முகஸ்துதி (பிறர் பார்த்து புகழ)

---

நிச்சயமாக இந்நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை வஞ்சிக்க நினைக்கின்றனர் ஆனால் அவன் அவர்களை வஞ்சித்துவிடுவான் தொழுகைக்கு அவர்கள் தயாராகும் பொழுது சோம்பலுடையோராகவே நிற்கிறார்கள் - மனிதர்களுக்குத் (தங்களையும் தொழுகையாளியாக்கி) காண்பிப்பதற்காக (நிற்கிறார்கள்) இன்னும், மிகச் சொற்ப அளவேயன்றி அவர்கள் அல்லாஹ்வை நினைவு கூர்வதில்லை. (4:142)

ஹதீஸ்கள்.

1. நபி(ஸல்) அவர்கள் கூற தாம் செவிமடுத்ததாக அபூ ஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள். கியாமத் நாளில் முதன் முதலாகத் தீர்ப்பு வழங்கப்படுபவர் அல்லாஹ்வின் பாதையில் ஷஹீதான மனிதராவார். அவர் கொண்டு வரப்படுவார். அல்லாஹ் தான் அவருக்கு அருளிய அருட்கொடைகளை (ஒவ்வொன்றாக) எடுத்துரைப்பான். அவர் அவைகளைப் புரிந்து கொண்டு விடுவார். (பின்னர்) அவ்வருட்கொடைகளின் விஷயத்தில் (நமக்கு நன்றி செலுத்தி) நீ என்ன அமல் (நற்செயல்) செய்தாய்? என அவரிடம் அல்லாஹ் கேட்பான். அதற்கவர் நான் உன் பாதையில் போர் செய்து ஷஹீதானேன். எனக் கூறுவார். அதற்கு அல்லாஹ் கூறுவான். நீ பொய் கூறி விட்டாய். நீ புத்திக் கூர்மையான மாவீரன் என (மக்களால்) புகழப்படுவதற்காகவே போர் செய்தாய். அவ்வாறு உன்னை உலகில் புகழ்ந்து கூறப்பட்டுவிட்டது. பின்னர் அல்லாஹ் உத்தரவிடுவான். அவனை முகம் குப்புற இழுத்துச் செல்லப்பட்டு நரகில் தள்ளப்படும்.

பிறகு கல்வியைக் கற்று கற்றுத்தந்து குர்ஆனை ஓதிய அறிஞரின் விஷயத்தில் தீர்ப்புச் செய்யப்படும். அவர் கொண்டு வரப்படுவார். அவருக்குத் தான் செய்த (கொடுத்த) அருட்கொடைகளை அல்லாஹ் எடுத்துரைப்பான். அவற்றை அவர் புரிந்து கொள்வார். அவற்றின் விஷயத்தில் (நமக்கு நன்றி செலுத்த) நீ என்ன அமல் செய்தாய்? என அல்லாஹ் கேட்பான். அதற்கவர் நான் கல்வியைக் கற்று மற்றவருக்குக் கற்றுக் கொடுத்தேன். உனக்காக குர்ஆனை ஓதினேன். எனக் கூறுவார். அதற்கு அல்லாஹ் நீ பொய் கூறிவிட்டாய் நீ அறிஞன் எனப் புகழப்பட் வேண்டும் எனக் கல்வியைக் கற்றாய் காரீ (குர்ஆன் ஓதுபவர்) எனப் புகழப்பட குர்ஆனை ஓதினாய் எனக் கூறுவான் பின்னர் அல்லாஹ் உத்தரவிடுவான் அவரை முகங்குப்புற இழுத்துச் செல்லப்பட்டு நரகில் தள்ளப்படும்.

பின்னர் தீர்ப்பளிக்கப்படுபவர் அல்லாஹ் விஸ்தீரணமாக அனைத்து வகைச் செல்வங்களையும் வழங்கியிருந்த மனிதராவார். அவர் கொண்டு வரப்படுவார். அவருக்குத் தான் செய்த (கொடுத்த) அருட்கொடைகளை அல்லாஹ் எடுத்துரைப்பான். அவரும் அவற்றைப் புரிந்து கொள்வார். நீ அவற்றின் விஷயத்தில் (நமக்கு நன்றி செலுத்த) என்ன அமல் செய்தாய்? என்று அல்லாஹ் கேட்பான் அதற்கவர் என் செல்வத்தை நீ விரும்பும் எந்த வழியிலும் உனக்காகச் செலவழிக்காமல் நான் விட்டு வைக்கவில்லை என்று கூறுவார். அதற்கு அல்லாஹ் நீ பொய் கூறிவிட்டாய். கொடையாளி என்று நீ

புகழப்படுவதற்காகச் செலவு செய்தாய். அவ்வாறு உன்னைப் புகழப்பட்டுவிட்டது என்று கூறுவான் பின்னர் அல்லாஹ் உத்தரவிடுவான். அவரை முகங்குப்புற இழுத்துச் செல்லப்பட்டு நரகில் தள்ளப்படும். நூல். புகாரி (1617)

2. யார் மக்கள் புகழ்வதற்காக ஓர் அமலைச் (நல்அமலை) செய்வாரோ அவரை கியாம நாளில் அல்லாஹ் கேவலப் படுத்துவான். யார் மக்களுக்கு காட்டுவதற்காக ஓர் அமலைச் செய்வாரோ அல்லாஹ் கியாம நாளில் மக்களின் முன்னிலையில் அவரின் இரகசியங்களை வெளிப்படுத்துவான். நூல். முஸ்லிம் அறிவிப்பவர். ஜூ ன்துப் பின் அப்தில்லாஹ் பின் ஸூ ஃப்யான் (ரலி)

3. ஒரு மனிதர் மற்றொரு மனிதரைப் புகழ்வதையும் அதில் வரம்பு மீறுவதையும் பற்றிக் கேள்விப் பட்ட நபி(ஸல்)அவர்கள் ஒருவர் பிறறை வரம்பு மீறிப் புகழ்ந்தால் அவரை நீங்கள் அழித்து விட்டீர்கள் அல்லது அவரின் முதுகை ஒடித்து விட்டீர்கள் என்று கூறினார்கள். நூல். புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். அபூ மூஸாஅல் அஸ்சரி (ரலி)

4. ஒரு முறை நபி(ஸல்) அவர்களிடம் ஒரு மனிதரைப் பற்றி கூறப்பட்டது. அவரை ஒரு மனிதர் புகழ்ந்தார். அப்பொழுது நபி(ஸல்) அவர்கள் புகழ்ந்த வரை நோக்கி உமக்கு நாசமுண்டாகட்டுமாக! உம் தோழரின் கழுத்தை நீர் துண்டித்த விட்டீர் என பல முறை கூறினார்கள். உங்களில் ஒருவர் மற்றவரைப் புகழ்ந்தே ஆக வேண்டுமெனில் இவ்வாறு இவ்வாறாக அவரை நான் எண்ணுகிறேன் எனக் கூறவும். மறைவானவற்றை புகழ்பவர் அறிய மாட்டார். அல்லாஹ்வே அறிந்தவன். நூல். புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். அபூபக்கர் (ரலி)

5. நேருக்கு நேர் புகழ்பவரைக் கண்டால் அவர் முகத்தில் மண்ணைவாரி வீசுங்கள் என நபி(ஸல்) கூறினார்கள் நூல். முஸ்லீம் அறிவிப்பவர். உத்மான் (ரலி)

## 17. தற்கொலை

---

நம்பிக்கை கொண்டவர்களே! உங்களில் ஒருவருக்கொருவர் பொருந்திக் கொள்ளும் முறையில் ஏற்படுகிற வர்த்தகம் அல்லாமல், ஒருவர் மற்றொருவரின் பொருட்களை தவறான முறையில் உண்ணாதீர்கள் நீங்கள் உங்களையே கொலைசெய்து கொள்ளாதீர்கள் - நிச்சயமாக அல்லாஹ் உங்களிடம் மிக்க கருணையுடையவனாக இருக்கின்றான். (4:29)

ஹதீஸ்கள்.

1. யார் வேண்டுமென்றே பொய்யாக இஸ்லாம் அல்லாத மார்க்கத்தை கொண்டு சத்தியம் செய்தானோ அவன் சொன்னது போன்றே ஆகிவிடுவான். யார் எந்தப் பொருளைக் கொண்டு தற்கொலை செய்துகொள்கின்றானோ அதே பொருளைக் கொண்டு அவன் கியாம நாளில் வேதனை செய்யப் படுவான். நூல். புகாரி, முஸ்லீம். அறிவிப்பவர். அபூ ஜைது (ரலி)

2. யார் இரும்பு ஆயுதத்தால் தற்கொலை செய்து கொள்கிறாரோ அவர் அந்த இரும்பு ஆயுதத்தைக் கையில் பிடித்துக் கொண்டு தமது வயிற்றில் குத்தியவராக மறுமை நாளில் வருவார். அவர் நரகில் என்றென்றும் நீடித்து நிலைத்திருப்பார். யார் விஷ மருந்தி தற்கொலை செய்து கொள்கிறாரோ அவர் அவ்விஷத்தைக் கையில் ஏந்தி அதை அருந்தியவராக நரகில் என்றென்றும் நிலைத்து விடுவார் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல். திர்மிதி அறிவிப்பவர். அபூஹூ ரைரா(ரலி)

3. யார் மலையிலிருந்து உருண்டு விழுந்து தற்கொலை செய்து கொண்டாரோ அவர் நரகில் உருண்டு விழுவார். அதில் என்றென்றும் (நரகில்) நிலைத்து விடுவார். நூல். திர்மிதி அறிவிப்பவர். அபூஹுரைரா (ரலி)

## 18. மது அருந்துதல்

---

ஈமான் கொண்டோரே! மதுபானமும், சூதாட்டமும், கற்சிலைகளை வழிபடுதலும், அம்புகள் எறிந்து குறி கேட்பதும், ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயல்களிலுள்ளவையாகும் ஆகவே நீங்கள் இவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் - அதனால் நீங்கள் வெற்றியடைவீர்கள். (5:90)

நிச்சயமாக ஷைத்தான் விரும்புவதெல்லாம், மதுபானத்தைக் கொண்டும், சூதாட்டத்தைக் கொண்டும் உங்களிடையே பகைமையையும், வெறுப்பையும் உண்டு பண்ணி அல்லாஹ்வின் நினைவிலிருந்தும், கொள்கையிலிருந்தும் உங்களைத் தடுத்து விடத்தான் எனவே, அவற்றை விட்டும் நீங்கள் விலகிக் கொள்ள மாட்டீர்களா? (5:91)

ஹதீஸ்கள்.

1. ஒரு விபச்சாரகன் விபச்சாரத்தின் போதும் ஒரு குடிகாரன் மதுவருந்தும் போதும் ஒரு திருடன் திருடும்போதும் மூஃமினாக இருப்பதில்லை. அவனின் விசுவாசம் மேற்கூறிய தவறுகளைச் செய்யும் போது அவனை விட்டும் விலகி விடுகிறது. நூல். புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். அபூஹுரைரா (ரலி)

2. நபி(ஸல்) கூறினார்கள் அல்லாஹ் மதுவை மதுவருந்துபவனை, மதுதயாரிப்பவனை, வாங்குபவனை, விற்பவனை, எடுத்துச் செல்பவனை, எவனிடமிருந்து எடுத்துச் செல்லப் படுகிறதோ அவனை, எவன் தன் வாழ்வாதாரத்தை மதுவினால் ஆக்கிக் கொள்கிறானோ அவனை ஆகியோரை சபிக்கின்றான். நூல். இப்னு மாஜா, அபூதாவூத் அறிவிப்பவர். இப்னு உமர் (ரலி)

3. இவ்உம்மத்தில் சில மக்கள் தங்கள் இரவுகளை மது அருந்துவதிலும் வீண் கேளிக்கைகளிலும் கழிப்பார்கள். ஒரு காலைப் பொழுதில் அவர்கள் குரங்குகளாகவும் பன்றிகளாகவும் உருமாற்றப் படுவார்கள். அவர்கள் பூமியில் அழுத்தப் படுவார்கள் வானத்திலிருந்து கல் மாரி அவர்கள் மீது பொழியப்படும் மக்கள் இன்னின்ன கிராமங்களிலுள்ளோர் பூமியில் அழுத்தப்பட்டு லூத் நபி சமுதாய மக்கள் மீது கல் மாரி பொழிந்ததைப் போல் இவாகள் மீதும் பொழிந்தது எனக் கூறுவர் ஆது சமுதாய மக்கள் அழிக்கப்பட்டதும் இது போன்றுதான். வேதனைகள் நடப்பதற்கு காரணம் மதுவருந்துதல், வட்டி, பட்டாடைகள் அணிதல். பெண்பாடகிகளின் பாட்டுகளை இசையுடன் ரசித்துத் திளைத்ததினாலுமாகும். நூல். அஹ்மத் அறிவிப்பவர். அபூ உமாமா (ரலி)

4. சில மக்கள் மதுவை அதன் பெயரை மாற்றம் செய்து விட்டு அருந்துவர் அவர்களைச் சுற்றிப் பெண் பாடகிகள் சூழ்ந்திருப்பர் அல்லாஹ் அவர்களைப் பூமியில் மூழ்கடிப்பான். அவர்களை குரங்குகளாக, பன்றிகளாக உருமாற்றம் செய்வான். நூல். இப்னுமாஜா அறிவிப்பவர். அபூமாலிக் அல் அஸ்அரி (ரலி)

5. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் ஒரு வரை ஒருவர் சபித்தல் அபரிமிதமாக மது அருந்தப்படுதல் பட்டாடைகள் அணியப்படுதல் அதிக அளவில் பெண்பாடகிகள் உருவாதல் ஓரினச் சேர்க்கை ஆகிய இவ்வைந்தும் துவங்கிய பின் என் உம்மத்துக்கள் அழிக்கப் படுவார்கள். நூல். பைஹகீ அறிவிப்பவர். அனஸ் (ரலி)

6. மதுவருந்துபவன் மறுமையில் தாகித்தவனாய் எழுப்பப்படுவான். நூல். அஹ்மத் அறிவிப்பவர். அபூஹுரைரா (ரலி)

## 19. சூது, வீண்விளையாட்டு

ஈமான் கொண்டோரே! மதுபானமும், சூதாட்டமும், கற்சிலைகளை வழிபடுதலும், அம்புகள் எறிந்து குறி கேட்பதும், ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயல்களிலுள்ளவையாகும் ஆகவே நீங்கள் இவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் - அதனால் நீங்கள் வெற்றியடைவீர்கள்.

நிச்சயமாக ஷைத்தான் விரும்புவதெல்லாம், மதுபானத்தைக் கொண்டும், சூதாட்டத்தைக் கொண்டும் உங்களிடையே பகைமையையும், வெறுப்பையும் உண்டு பண்ணி அல்லாஹ்வின் நினைவிலிருந்தும், தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்து விடத்தான் எனவே, அவற்றை விட்டும் நீங்கள் விலகிக் கொள்ள மாட்டீர்களா? (5:90, 91)

(நபியே!) மதுபானத்தையும், சூதாட்டத்தையும் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர் நீர் கூறும் "அவ்விரண்டிலும் பெரும் பாவம் இருக்கிறது மனிதர்களுக்கு (அவற்றில் சில) பலன்களுமுண்டு ஆனால் அவ்விரண்டிலும் உள்ள பாவம் அவ்விரண்டிலும் உள்ள பலனைவிடப் பெரிது" (நபியே! "தர்மத்திற்காக எவ்வளவில்) எதைச் செலவு செய்ய வேண்டும்" என்று அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர் "(உங்கள் தேவைக்கு வேண்டியது போக) மீதமானவற்றைச் செலவு செய்யுங்கள்" என்று கூறுவீராக நீங்கள் சிந்தித்து உணரும் பொருட்டு அல்லாஹ் (தன்) வசனங்களை(யும், அத்தாட்சிகளையும்) அவ்வாறு விவரிக்கின்றான். (2:219)

ஹதீஸ்கள்.

1. உங்களில் யார் சத்தியம் செய்யும்போது (அறியாமைக் கால தெய்வச் சிலைகளான) லாத்தின் மீதும் உஸ்ஸாவின் மீதும் சத்தியமாக என்று கூறிவிட்டாரோ அவர் (அதற்குப்பரிகாரமாக) லாயிலாக இல்லல்லாஹு (வணக்கத்திற்குத்தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை) என்று சொல்லட்டும். யார் தம் நண்பரிடம் வா சூது விளையாடுவோம் என்று கூறுகின்றாரோ அவர் (அதற்குப் பகரமாக எதையேனும்) தர்மம் செய்யட்டும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அபூஹுரைரா (ரலி) புகாரி (6107)

2. எவரொருவர் பகடைக் காய்களைவைத்து (சொக்கட்டான், சதுரங்கம்) விளையாடுகிறாரோ அவர் தம் கைகளை பன்றியின் இரத்தத்தில் தோய்த்துவிட்டார். நூல். முஸ்லிம்

3. எவரொருவர் பகடைக் காய்களை வைத்து (சொக்கட்டான், சதுரங்கம்) விளையாடுகிறாரோ அவர் தம் கைகளைப் பன்றியின் இறைச்சியிலும், இரத்தத்திலும் தோய்த்துவிட்டார். நூல். அபூதாவூத், இப்னு மாஜா

4. எவரொருவர் மேஜையின் மீது பகடைக் காய்களை வைத்து (சதுரங்கம்) விளையாடுகிறாரோ அவர் அல்லாஹ்வுக்கு கீழ்படியாதவர் ஆவார். நூல். அபூதாவூத் அறிவிப்பவர். அபூமூஸா (ரலி)

5. பகடைகாய் போன்ற வீண் விளையாட்டுகளில் மூழ்குவோர் நிராகரிப் போரின் சூதில் மூழ்கியவராவார். நூல். தப்ராணி அறிவிப்பவர். அபூஹுரைரா (ரலி)

## 20. கோபப்படுதல்

(பயபக்தியுடையோர் எத்தகையோர் என்றால்,) அவர்கள் இன்பமான (செல்வ) நிலையிலும், துன்பமான (ஏழ்மை) நிலையிலும் (இறைவனின் பாதையில்) செலவிடுவார்கள் மனிதர்(கள் செய்யும் பிழை)களை மன்னிப்போராய் இருப்பார்கள் (இவ்வாறு அழகாக) நன்மை செய்வோரையே அல்லாஹ் நேசிக்கின்றான். (3:134)

ஹதீஸ்கள்.

1. மல்யுத்தம் புரிபவர் மாவீரனல்ல. மாறாக கோபத்தின் போது தம்மை அடக்கிக் கொள்பவரே மாவீரர் ஆவார். நூல். புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். அபூஹூ ரைரா(ரலி)

2. நான் நபி(ஸல்) அவர்களுடன் அமர்ந்திருந்தேன் இருமனிதர்கள் ஒருவரையொருவர் திட்டிக் கொண்டிருந்தார்கள். அவ்விருவரில் ஒருவரின் முகம் சிவந்து கழுத்து நரம்புகள் புடைத்து விட்டன அந்நேரம் நபி(ஸல்) நான் ஒரு சொல்லை அறிவேன் அதனைக் கூறினால் அவர் கோபம் அவரை விட்டும் நீங்கி விடும் அவர் அவூதுபில்லாஹி மினஷ் ஷைத்தானிர்ரஜீம் (எடுத்தெரியப் பட்ட ஷைத்தானிடமிருந்து அல்லாஹ்விடம் நான் பாதுகாவல் தேடுகிறேன்) என்று அவர் கூறுவாரேயானால் அவரின் கோபம் நீங்கிவிடும் என்று கூறினார்கள் அம்மனிதருக்கு நபித்தோழர்கள் இதனை எடுத்துக் கூறினார்கள். நூல். புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். ஸூ லைமான் பின் ஸூ ரது (ரலி)

3. யார் கோபத்தைப் பிரயோகிக்க சக்திபெற்றிருந்தும் கோபத்தை அடக்கிக் கொள்கிறாரோ அவரை அல்லாஹ் கியாமநாளில் மக்களின் முன்பு அழைத்து கண்ணியப் படுத்துவான் எப்படி என்றால் ஹூ ருல் ஈன்கள் எனும் சுவனக் கன்னியர்களில் அவர் விரும்புபவரை தேர்வுசெய்து கொள்ள அல்லாஹ் அவருக்குக் கூறுவான். நூல். அபூதாவூத், திர்மிதி அறிவிப்பவர். முஆது பின் அனஸ் (ரலி)

4. தமக்கு நல்லுபதேசம் செய்யச் சொன்ன ஒரு மனிதருக்கு நபி(ஸல்) நீர் கோபப் படாதீர் எனும் இச்சொல்லைப் பல முறை திரும்ப திரும்பக் கூறினாகள். நூல். புகாரி அறிவிப்பவர். அபூஹூ ரைரா(ரலி)

5. எவரேனும் கோபப்பட்டால் அவர் நின்று கொண்டிருந்தால் உட்காரட்டும் அவர் அமர்ந்திருக்கும் போது கோபப்பட்டால் படுத்துக் கொள்ளட்டும். நூல். இப்னுஹிப்பான் அறிவிப்பவர். அபூதர் (ரலி)

## 21. கஞ்சத்தனம்

இன்னும், அவர்கள் செலவு செய்தால் வீண் விரையம் செய்யமாட்டார்கள் (உலோபித்தனமாகக்) குறைக்கவும் மாட்டார்கள் - எனினும், இரண்டுக்கும் மத்திய நிலையாக இருப்பார்கள். (25:67)

(உலோபியைப் போல் உதுவும் வழங்காது) உம் கையை உம் கழுத்தில் கட்டப் பட்டதாக்கிக் கொள்ளாதீர் அன்றியும், (அனைத்தையும் செலவழித்து உம் கையை) ஒரே விரிப்பாக விரித்து விடாதீர் அதனால் நீர் நிந்திக்கப்பட்டவராகவும், (கையில் எதுவுமில்லாது) துக்கப்பட்டவராகவும் அமைந்து விடுவீர். (17:29)

(அத்தகையவன் செல்வமே சாசுவதமென எண்ணிப்) பொருளைச் சேகரித்து எண்ணிக் கொண்டே இருக்கின்றான். (104:2)

நிச்சயமாகத், தன் பொருள் தன்னை (உலகில் நித்திய ஜீவனாக) என்றும் நிலைத்திருக்கச் செய்யுமென்று அவன் எண்ணுகிறான். (104:3)

ஹதீஸ்கள்.

1. கஞ்சத்தனம் கெட்ட குணம் ஆகிய இரண்டும் எந்த மூமினிடமும் ஒன்று சேர முடியாது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல். திர்மிதி அறிவிப்பவர். அபூஸயீத் அல் குத்ரி (ரலி)

2. ஏமாற்றுபவனும், கஞ்சனும், கொடுத்ததை சொல்லிக்காட்டுபவனும் சுவனத்தில் நுழைய முடியாது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல். திர்மிதி அறிவிப்பவர். அபூபக்கர் ஸித்தீக் (ரலி)

3. மூமின் வெகுளியாகவும் வள்ளல் தன்மையுள்ளவனாகவும் இருப்பான் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல். திர்மிதி அறிவிப்பவர். அபூஹுரைரா(ரலி)

4. அநியாயம் செய்வதை அஞ்சிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அநியாயம் கியாமத்து நாளின் இருள்களாக இருக்கும் மேலும் கஞ்சத்தனத்தை விட்டும் விலகிக் கொள்ளுங்கள் நிச்சயமாக கஞ்சத்தனம் உங்களுக்கு முன்பிருந்தோரை அழித்துவிட்டது. இரத்தத்தை ஓட்டுவது மீதும் விலக்கப்பட்டவகளை ஆகுமானதாக ஆக்கி வைப்பதின் மீதும் அவர்களைத் தூண்டிவிட்டது. நூல். முஸ்லிம் அறிவிப்பவர். ஜாபிர் (ரலி)

5. செல்வத்தை முடிச்சுப் போட்டு வைக்கவேண்டாம். நீ அவ்வாறு செய்தால் அல்லாஹ்வும் உன்மீது முடிச்சுப் போட்டு விடுவான். மற்றொரு அறிவிப்பில் நீ செலவழிப்பாயாக! எண்ண வேண்டாம் நீ எண்ணி எண்ணி செலவு செய்தால் அல்லாஹ்வும் உனக்கு எண்ணியே கொடுப்பான் நீ தடுத்து வைத்துக் கொள்ளாதே! அல்லாஹ்வும் உனக்கு தடுத்துக் கொள்வான். நூல். புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். அஸ்மா பின்த் அபுபக்கர் (ரலி)

## 22. பேராசை

---

அறிந்து கொள்ளுங்கள் “நிச்சயமாக இவ்வுலக வாழ்க்கை விளையாட்டும், வேடிக்கையும், அலங்காரமுமேயாகும் மேலும் (அது) உங்களிடையே பெருமையடித்துக் கொள்வதும் பொருள்களையும், சந்ததிகளையும் பெருக்குவதுமேயாகும் (இது) மழையின் உதாரணத்துக்கு ஒப்பாகும் (அதாவது) அது முளைப்பிக்கும் பயிர் விவசாயிகளை ஆனந்தப் படுத்துகிறது் ஆனால், சீக்கரமே அது உலர்ந்து மஞ்சள் நிறம் ஆவதை நீர் காண்கிறீர் பின்னர் அது கூளமாகி விடுகிறது (உலக வாழ்வும் இத்தகையதே எனவே உலக வாழ்வில் மயங்கியோருக்கு) மறுமையில் கடுமையன வேதனையுண்டு (முஃமின்களுக்கு) அல்லாஹ்வின் மன்னிப்பும், அவன் பொருத்தமும் உண்டு - ஆகவே, இவ்வுலக வாழ்க்கை ஏமாற்றும் சொற்ப சுகமே தவிர (வேறு) இல்லை. (57:20)

பெண்கள், ஆண் மக்கள் பொன்னிலும், வெள்ளியிலுமான பெருங்குவியல்கள் அடையாளமிடப்பட்ட (உயர்ந்த) குதிரைகள் (ஆடு, மாடு, ஒட்டகை போன்ற) கால் நடைகள், சாகுபடி நிலங்கள் ஆகியவற்றின் மீதுள்ள இச்சை மனிதர்களுக்கு அழகாக்கப்பட்டிருக்கிறது இவை(யெல்லாம் நிலையற்ற) உலக வாழ்வின் சுகப்பொருள்களாகும் அல்லாஹ்விடத்திலோ அழகான தங்குமிடம் உண்டு. (3:14)

செல்வத்தைப பெருக்கும் ஆசை உங்களை (அல்லாஹ்வை விட்டும்) பராக்கி விட்டது-

நீங்கள் கப்றுகளைச் சந்திக்கும் வரை.

அவ்வாறில்லை, விரைவில் (அதன் பலனை) நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

பின்னர் அவ்வாறல்ல, விரைவில் (அதன் பலனை) நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

அவ்வாறல்ல - மெய்யான அறிவைக் கொண்டறிந்திருப்பீர்களானால் (அந்த ஆசை உங்களைப் பராக்காக்காது).

நிச்சயமாக (அவ்வாசையால்) நீங்கள் நரகத்தைப் பார்ப்பீர்கள்.

பின்னும், நீங்கள் அதை உறுதியாகக் கண்ணால் பார்ப்பீர்கள். (102:1,7)

ஹதீஸ்கள்.

1. தங்கநாணயங்கள், வெள்ளிக் காசுகள், பழங்கள், துணிமணிகள் ஆகியவைகளின் அடிமை (இவைகளை அனுபவித்து மூழ்கிவிட்டவன்) நாசமாகிவிட்டான். அவன் கொடுக்கப்பட்டால் பொருந்திக் கொள்வான். கொடுக்கப்படாவிட்டால் பொருந்திக் கொள்ள மாட்டான். நூல். புகாரி அறிவிப்பவர். அபூஹுரைரா (ரலி)

2. ஆதமின் மகன் என் செல்வம் என் செல்வம் என்று கூறுகிறான் ஆதமின் மகனே! உன் செல்வத்திலிருந்து நீ உண்டு தீர்த்ததைத் தவிர நீ உடுத்திக் கிழித்ததைத் தவிர அல்லது நீ தானதர்மம் செய்ததைத் தவிர வேறு ஏதேனும் உனக்கு உள்ளதா? என நபி(ஸல்)அவர்கள் கேட்டார்கள். நூல். முஸ்லீம் அறிவிப்பவர். அப்துல்லாஹ் பின் ஷிக்கிர் (ரலி)

3. ஒரு ஆட்டு மந்தையில பசியான இரு ஓநாய்கள் அவிழ்த்து விடப்பட்டால் அம்மந்தையை(அவ்ஓனாய்கள்) நாசமாக்குவதை விட அதிகமாக செல்வத்தின் மீதும் பதவியின் மீதும் உள்ள மனிதனின் பேராசை அவனது தீனை (மார்க்கத்தை) நாசமாக்குகிறது. நூல். திர்மிதி அறிவிப்பவர். கஃபு பின் மாலிக் (ரலி)

4. ஆதமின் மகனுக்கு ஒரு தங்க ஓடை கிடைத்து விட்டாலும் இரு தங்க ஓடைகள் கிடைக்க வேண்டுமென்று ஆசைப்படுவான் அவன் வாயை மண்ணறை மன்னை தவிர வேறு எதுவும் நிரப்பாது. (மரணம் வரை அவன் பேராசை பிடித்தவனாகவே இருப்பான்) பாவமன்னிப்புத் தேடி அல்லாஹ்வின் பால் மீள்பவனை அல்லாஹ் மன்னிக்கிறான். நூல். புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். இப்னு அப்பாஸ் (ரலி)

## 23. அண்டை வீட்டாரைத் துன்புறுத்துதல்

மேலும், அல்லாஹ்வையே வழிபடுங்கள் அவனுடன் எதனையும் இணை வைக்காதீர்கள். மேலும், தாய் தந்தையர்க்கும், நெருங்கிய உறவினர்களுக்கும். அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், அண்டை வீட்டிலுள்ள உறவினர்களுக்கும், அருகிலுள்ள அண்டை வீட்டாருக்கும், (பிரயாணம், தொழில் போன்றவற்றில்) கூட்டாளிகளாக இருப்போருக்கும், வழிப்போக்கர்களுக்கும், உங்களிடமுள்ள அடிமைகளுக்கும் அன்புடன் உபகாரம் செய்யுங்கள் நிச்சயமாக அல்லாஹ் கர்வமுடையோராக, வீண் பெருமை உடையோராக இருப்பவர்களை நேசிப்பதில்லை. (4:36)

ஹதீஸ்கள்.

1. எவரின் கரங்களாலும், கெட்ட நடவடிக்கைகளாலும் அவரின் அண்டை வீட்டார்கள் பாதுகாப்புப் பெறவில்லையோ அவர் ஒரு விசுவாசியல்ல. மற்றொரு அறிவிப்பில் எவரின் கெட்ட செயல்களால் அவரின்

அண்டை வீட்டுக்காரர் பாதுகாப்புப் பெறவில்லையோ அவர் சுவனம் புகமாட்டார் நூல். புகாரி, அஹ்மத், முஸ்லீம் அறிவிப்பவர். அபூஹுரைரா (ரலி)

2. என் உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன் மீது சத்தியமாக! தனக்கு விரும்புவதையே தன் அண்டை வீட்டாருக்கு விரும்பாத வரை ஒருவன் முஃமீனாக (விசுவாசியாக) ஆகமாட்டான். நூல். முஸ்லிம் அறிவிப்பவர். அனஸ் (ரலி)

3. ஒரு முறை நபி(ஸல்)அவர்கள் அண்டைவிட்டாரைத் துன்புறுத்துவோரை எதிர்த்து அறப்போர் புரியவும் அவருடன் சேராதிருக்கவும் பிரகடனம் செய்தார்கள். ஒருவர் தம் அண்டை வீட்டாரின் சுவற்றில் தண்ணீரை ஊற்றுவதாக நபிகாளாரிடம் கூறப்பட்டது. நபி(ஸல்) அவர்கள் அவரைத் தன்னுடன் சேராதிருக்குமாறு உத்தரவிட்டார்கள். நூல். புகாரி, முஸ்லீம் அறிவிப்பவர். இப்னு உமர் (ரலி)

4. நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அண்டை வீட்டுக்காரரை எங்கு(எனக்கு) வாரிசாக்கி விடுவாரோ என நான் பயப்படும் அளவுக்கு அண்டைவீட்டாரின் நலம் பேண ஜிப்ரில் (அலை) தொடர்ந்து எனக்கு உபதேசித்துக் கொண்டிருந்தார்கள். நூல். புகாரி, முஸ்லீம் அறிவிப்பவர். இப்னு உமர் (ரலி)

5. அல்லாஹ்வையும் மறுமைநாளையும் நம்பிக்கைக் கொண்டோர் தம் அண்டை வீட்டாருக்கு வேதனை தரமாட்டார். அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கைக் கொள்பவர் தம் விருந்தினரைக் கண்ணியப் படுத்துவார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர் நல்லதைப் பேசட்டும் அல்லாது வாய் மூடி இருக்கட்டும். நூல். புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். அபூஹுரைரா (ரலி)

## 24. இறந்தவருக்காக ஒப்பாரி வைத்தல்

---

ஹதீஸ்கள்

1. மனிதர்களின் இவ்விருசெயல்கலும் இறை நிராகரிப்பாகும். 1. இறந்தவருக்காக ஒப்பாரி வைப்பது 2. வம்சாவழியைப் பழிப்பது (குறை கூறுவது) நூல். முஸ்லீம்.

2. கன்னத்தில் அடித்துக் கொள்பவரும் ஆடைகளைக் கிழித்துக் கொள்பவரும் அறியாமைக்கால (மடமை) செயல்களின்பால் அழைப்பவரும் நம்மைச் சார்ந்தவரல்ல. நூல். புகாரி, முஸ்லீம் அறிவிப்பவர். இப்னு உமர் (ரலி)

3. யாருக்காக ஒப்பாரி வைத்து அழப்படுகிறாதோ அவரைக் கப்ரில் வேதனை செய்யப்படும். நூல். புகாரி, முஸ்லீம் அறிவிப்பவர். உமர் (ரலி)

4. நிச்சயமாக நபி(ஸல்) அவர்கள் ஒப்பாரி வைத்து அழும் பெண்ணை விட்டும் சோதனை மற்றும் கஷ்டகாலங்களில் தலையை மொட்டை அடித்துக் கொள்ளும் பெண்ணை விட்டும் தன் ஆடைகளைக் கிழித்துக் கொள்ளும் பெண்ணை விட்டும் நான் நீங்கிவிட்டேன் என்று கூறினார்கள். நூல். புகாரி, முஸ்லீம் அறிவிப்பவர். அபூதர்தா (ரலி)

5. நபி(ஸல்) அவர்கள் எங்களிடம் இஸ்லாம் பற்றி கூறி (பைஅத்) உறுதிப்பிரமாணம் செய்தபோது நாங்கள் இறந்தவர்களுக்காக ஒப்பாரி வைத்து அழ மாட்டோம் என்ற உறுதி மொழியையும் பெற்றுக் கொண்டார்கள். நூல். புகாரி, முஸ்லீம் அறிவிப்பவர். உம்மு அதிய்யா (ரலி)

## 25. பிறரை சபித்தல், திட்டுதல்

அநியாயம் செய்யப்பட்டவர்களைத் தவிர (வேறு யாரும்) வார்த்தைகளில் தீயவற்றை பகிரங்கமாகக் கூறுவதை அல்லாஹ் விரும்பவில்லை - அல்லாஹ் நன்கு செவியுறுவோனாகவும் யாவற்றையும் அறிபவனாகவும் இருக்கின்றான். (4:148)

ஹதீஸ்கள்.

1. அல்லாஹ்வின் சாபம், அல்லாஹ்வின் கோபம் உண்டாகட்டும் என்றோ நரகம் உனக்கு கிடைக்கட்டும் என்றோ நீங்கள் ஒருவரை ஒருவர் சபிக்காதீர்கள் என நபி(ஸல்) கூறினார்கள் நூல். திர்மிதி அறிவிப்பவர். ஸமுரா பின் ஜு ன்துப் (ரலி)

2. குறை கூறித் திரிபவனும், சபிப்பவனும், அநாகரீகமாக நடப்பபவனும், வெட்கத்தை உதறியவனும் மூமின் அல்ல என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல். திர்மிதி அறிவிப்பவர். இப்னு மஸ்ஊத் (ரலி)

3. உண்மையாளன் திட்டக்கூடியவனாக இருப்பது அவனுக்கு அழகல்ல. நூல். முஸ்லீம் அவிவிப்பவர். அபூஹு ரைரா (ரலி)

4. சபிப்பவன் மறுமைநாளன்று பரிந்துரை செய்பவனாகவோ சாட்சியாளனாகவோ வரமுடியாது. நூல். முஸ்லீம். அறிவிப்பவர். அபூதர்தா (ரலி)

5. ஒருவன் மற்றவனைப் பார்த்து பாவி என்றோ நிராகரிப்பாளன் (கா∴பிர்) என்றோ கூறுவானேயானால் அவ்வாறு கூறப்பட்டவன் அதற்குறியவனாக இல்லாத போது திட்டியவனையே அது வந்தடைகின்றது. நூல். புகாரி அறிவிப்பவர். அபூதர் (ரலி)

6. இறந்து விட்டவர்களைத் திட்டாதீர்கள் நிச்சயமாக அவர்கள் முற்படுத்தியதின் பக்கம் சென்றடைந்து விட்டார்கள். நூல். புகாரி அறிவிப்பவர். ஆயிஷா (ரலி)

காய்ச்சலைத்திட்டாதீர்கள் நிச்சயமாக நெருப்பு இரும்பின் துருவை நீக்குவது போல் காய்ச்சல் ஆதமின் மக்களின் பாவங்களைப் போக்குகின்றது. நூல். முஸ்லிம் அறிவிப்பவர். ஜாபிர் (ரலி)

8. சேவலைத் திட்டாதீர்கள் ஏனெனில் நிச்சயமாக அது தொழுகைக்கு அழைக்கிறது. நூல். அபூதாவூது அறிவிப்பவர். ஸைத் பின் காலித் (ரலி)

9. காற்றைத் திட்டாதீர்கள் நீங்கள் கற்றை வெறுத்தால் இவ்வாறு கூறுங்கள் யா அல்லாஹ் இக்காற்றின் நன்மையை உன்னிடம் இறைஞ்சுகிறேன் அதன் தீமையை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். நூல். அபூதாவூது, இப்னுமாஜா

## 26. வாங்கியக் கடனை ஏமாற்றுதல்

ஈமான் கொண்டோரே! ஒரு குறித்த தவணையின் மீது உங்களுக்குள் கடன் கொடுக்கல் வாங்கல் செய்து கொண்டால், அதை எழுதி வைத்துக் கொள்ளுங்கள் எழுதுபவன் உங்களிடையே நீதியுடன் எழுதட்டும் எழுதுபவன் எழுதுவதற்கு மறுக்கக்கூடாது (நீதமாக எழுதுமாறு) அல்லாஹ் அவனுக்குக் கற்றுக் கொடுத்தபடி அவன் எழுதட்டும். இன்னும் யார் மீது கடன் (திருப்பிக் கொடுக்க வேண்டிய) பொருப்பு இருக்கிறதோ அவனே (பத்திரத்தின்) வாசகத்தைச் சொல்லட்டும் அவன் தன் ரப்பான (அல்லாஹ்வை) அஞ்சிக் கொள்ளட்டும் மேலும், அ(வன் வாங்கிய)தில் எதையும் குறைத்து விடக் கூடாது இன்னும், யார் மீது கடன் (திருப்பிக் கொடுக்க வேண்டிய) பொறுப்பு இருக்கிறதோ அவன்

அறிவு குறைந்தவனாகவோ, அல்லது (பால்யம், முதுமை போன்ற காரணங்களால்) பலஹீனனாகவோ, அல்லது வாசகத்தைக் கூற இயலாதவனாகவோ இருப்பின் அவனுடைய வலீ (நிர்வாகி) நீதமாக வாசகங்களைச் சொல்லட்டும் தவிர, (நீங்கள் சாட்சியாக ஏற்கக் கூடிய) உங்கள் ஆண்களில் இருவரை சாட்சியாக்கிக் கொள்ளுங்கள் ஆண்கள் இருவர் கிடைக்காவிட்டால், சாட்சியங்களில் நீங்கள் பொருந்தக்கூடியவர்களிலிருந்து ஆடவர் ஒருவரையும், பெண்கள் இருவரையும் சாட்சிகளாக எடுத்துக் கொள்ளுங்கள் (பெண்கள் இருவர்) ஏனென்றால் அவ்விருவரில் ஒருத்தி தவறினால், இருவரில் மற்றவள் நினைவூட்டும் பொருட்டேயாகும் அன்றியும், (சாட்சியம் கூற) சாட்சிகள் அழைக்கப்பட்டால் அவர்கள் மறுக்கலாகாது தவிர, (கொடுக்கல் வாங்கல்) சிறிதோ, பெரிதோ அதை, அதன் கால வரையறையுடன் எழுதுவதில் அலட்சியமாக இராதீர்கள் இதுவே அல்லாஹ்வின் முன்னிலையில் மீகவும் நீதமானதாகவும், சாட்சியத்திற்கு உறுதி உண்டாக்குவதாகவும், இன்னும் இது உங்களுக்கு சந்தேகங்கள் ஏற்படாமல் இருக்க சிறந்த வழியாகவும் இருக்கும் எனினும் உங்களிடையே சுற்றி வரும் ரொக்க வியாபாரமாக இருப்பின், அதை எழுதிக் கொள்ளாவிட்டலும் உங்கள் மீது குற்றமில்லை ஆனால் (அவ்வாறு ) நீங்கள் வியாபாரம் செய்யும்போதும் சாட்சிகளை வைத்துக் கொள்ளுங்கள் - அன்றியும் எழுதுபனையோ, சாட்சியையோ (உங்களுக்கு சாதகமாக இருப்பதற்காகவோ, வேறு காரணத்திற்காகவோ) துன்புறுத்தப்படக் கூடாது நீங்கள் அப்படிச் செய்வீர்களாயின் அது உங்கள் மீது நிச்சயமாகப் பாவமாகும் அல்லாஹ்வுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள் ஏனெனில் அல்லாஹ் தான் உங்களுக்கு (நேரிய இவ்விதிமுறைகளைக்) கற்றுக் கொடுக்கின்றான். தவிர, அல்லாஹ்வே எல்லாப் பொருட்களையும் பற்றி நன்கறிபவன். (2:282)

ஹதீஸ்கள்.

1. அல்லாஹ் ஒருவன் திருப்பிக் கொடுக்கும் எண்ணத்துடன் வாங்கும் கடனைத் தீர்ப்பதில் கருணை புரிகின்றான் மறுமையில் அவனுக்குக் கடன் வழங்கியவனை மகிழ்விக்கிறான் ஒருவன் தான் வாங்கும் கடனை திருப்பிக் கொடுக்காத எண்ணத்துடன் இருப்பானேயானால் அவனது நன்மைகளை மறுமையில் கடன் வழங்கியவனுக்கு அல்லாஹ் மாற்றிக் கொடுக்கிறான் மற்றொரு அறிவிப்பில் எவனொருவன் தன் கடனைத் திருப்பிச் செலுத்தாத எண்ணத்துடன் வாங்குகிறானோ அவன் அல்லாஹ்வை மறுமையில் ஒரு திருடனைப் போல் சந்திப்பான். நூல். புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். அபூஉமாமா (ரலி)

2. எவனெருவன் தன் மனைவிக்கு நிர்ணயிக்கப்பட்ட மஹர் தொகையை கொடுக்கக் கூடாது என்ற எண்ணத்துடன் இருந்தால் அவன் ஒரு விபச்சாரனாக மரணிக்கிறான் எவனொருவன் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த மாட்டேன் என்ற எண்ணத்துடன் கடன் வாங்குகிறானோ அவன் வரம்பு மீறியவனாவான். இருவருமே நரக வாசிகளாய் இருப்பர். நூல். தப்ரானீ அறிவிப்பவர். ஸுஹைப் (ரலி)

3. பாவங்களைக் குறைவாகச் செய் மரணம் உனக்கு எளிதாக்கப்படும் நிம்மதியுடன் திகழும். நூல். பைஹகீ அறிவிப்பவர். இப்னு உமர் (ரலி)

4. தனக்கு சக்தியிருந்தும் வாங்கியக் கடனைத் திருப்பிச் செலுத்தாதவன் ஒரு அக்கிரமக்காரனாவான் நூல். புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். அபூஹுரைரா (ரலி)

5. என் உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன் மீது சத்தியமாக ஒருவன் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தாத வரை சுவனத்திற்குள் நுழைய முடியாது. அவன் அல்லாஹ் வின் பாதையில் போரிட்டு வீர மரணடைந்திருப்பினும் சரியே அல்லாஹ் அவனுக்குக் கடன் வழங்கியவனை மகிழ்விப்பான் கடன் வாங்கியவனின் நல்லறங்களை கடன் வழங்கியவனுக்கு மாற்றிவிடுவான். நூல். புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். முஹம்மது பின் அப்துல்லாஹ் பின் ஹஜ்ஜாக் (ரலி)

6. உயிலை (மரண சாசனத்தை)நிறைவேற்றுவதற்கு முன்பு கடனைச் செலுத்திவிடுமாறு நபி(ஸல்) அவர்கள் தீர்ப்பளித்தார்கள். நூல். திர்மிதி அறிவிப்பவர். அலி (ரலி)

## 27. லஞ்சம், பொருளாதார மோசடி

---

அன்றியும், உங்களுக்கிடையில் ஒருவர் மற்றவரின் பொருளைத் தவறான முறையில் சாப்பிடாதீர்கள் மேலும், நீங்கள் அறிந்து கொண்டே பிற மக்களின் பொருள்களிலிருந்து(எந்த) ஒரு பகுதியையும், அநியாயமாகத் தின்பதற்காக அதிகாரிகளிடம் (இலஞ்சம் கொடுக்க) நெருங்காதீர்கள். (2:188)

ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கும், (அவனுடைய) தூதருக்கும் மோசம் செய்யாதீர்கள் நீங்கள் அறிந்து கொண்டே, உங்களிடமுள்ள அமானிதப் பொருட்களிலும் மோசம் செய்யாதீர்கள். (8:27)

மேலும் நீங்கள் அளந்தால், அளவைப் பூர்த்தியாக அளவுங்கள் (இன்னும்) சரியான தராசைக் கொண்டு நிறுத்துக் கொடுங்கள். இதுவே நன்மையுடையதாகவும், முடிவில் (பலன் தருவதில்) அழகானதுமாகும். (17:35)

ஹதீஸ்கள்.

1. நபி(ஸல்)அவர்கள் லஞ்சம் கொடுப்பவனையும் அதனைப் பெற்றுக் கொள்பவனையும் அல்லாஹ் சபிப்பானாக! என்று கூறினார்கள். நூல். அபூதாவூது, திர்மிதி அறிவிப்பவர். இப்னு உமர் (ரலி)

2. எவர் லஞ்சலாவண்யத்தில் மூழ்கியிருக்கிறாரோ அவர் நரகில். என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல். அபூதாவூது, திர்மிதி அறிவிப்பவர். அப்துல் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி)

3. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் எங்கு மக்களிடம் விபச்சாரம் மிகுந்து விடுகின்றதோ அம்மக்கள் மீது பஞ்சமும் குழப்பமும் தலை விரித்தாடும் எங்கு மக்களிடம் லஞ்சவாவண்யம் மிகுந்து விடுகின்றதோ அவர்கள் அல்லாஹ்வின் கோபத்திற்கும் பீதிக்கும் ஆளாவர். நூல். அஹ்மத் அறிவிப்பவர். அனஸ் (ரலி)

நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள் ஒரு நீதிபதியோ அல்லது ஒரு ஆளுநரோ மறுமை நாளில் தம்கைகளை கழுத்துடன் சேர்த்துக் கட்டப்பட்டவர்களாத் தோன்றுவார்கள் அவர்களின் தீர்ப்புகள் உண்மை மற்றும் நேர்மையின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தால் அவர்கள் விடுவிக்கப்படுவர். அவர்கள் லஞ்சம் பெற்று நீதிக்கு மாறாக தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால் நரகில் தூக்கி வீசப்படுவர் நரகின் அடிபாதாளத்தில் அவர்கள் வேதனைக்குள்ளாக்கப்படுவர். நூல். தப்தானி அறிவிப்பவர். இப்னு அப்பாஸ் (ரலி)

5. பொறுப்பிலுள்ள நிர்வாக அதிகாரி அன்பளிப்புப் பெறுவது விசுவாசக் கேடாகும். நூல். அஹ்மத் அறிவிப்பவர். அபூஹுரைரா(ரலி)

6. அல்லாஹ் இறக்கியதை விட்டும் மார்க்கத்திற்கு மாற்றமாகத் தீர்ப்பு வழங்குபவரின் தொழுகையை அல்லாஹ் ஏற்றுக்கொள்ள மாட்டான். நூல். ஹாக்கீம்.

## 28. செய்த உதவியைச் சொல்லிக் காட்டுதல்

---

அல்லாஹ்வின் பாதையில் எவர் தங்கள் செல்வத்தைச் செலவிட்ட பின்னர், அதைத் தொடர்ந்து அதைச் சொல்லிக் காண்பிக்காமலும், அல்லது (வேறு விதமாக) நோவினை செய்யாமலும்

இருக்கின்றார்களோ அவர்களுக்கு அதற்குரிய நற்கூலி அவர்களுடைய இறைவனிடத்தில்லை உண்டு இன்னும் - அவர்களுக்கு எத்தகைய பயமுமில் அவர்கள் துக்கமும் அடையமாட்டார்கள், (2:262)

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வின் மீதும், இறுதி நாளின் மீதும் நம்பிக்கை கொள்ளாமல், மனிதர்களுக்குக் காட்டுவதற்காகவே தன் பொருளைச் செலவழிப்பவனைப்போல், கொடுத்ததைச் சொல்லிக் காண்பித்தும், நோவினைகள் செய்தும் உங்கள் ஸதக்காவை (தான தர்மங்களைப்) பாழாக்கி விடாதீர்கள் அ(ப்படிச் செய்ப)வனுக்கு உவமையாவது ஒரு வழுக்குப் பாறையாகும் அதன் மேல் சிறிது மண் படிந்துள்ளது அதன் மீது பெருமளவு மழை பெய்து (அதிலிருந்த சிறிது மண்ணையும் கழுவித்) துடைத்து விட்டது அவ்வாறே அவர்கள் செய்த -(தானத்)திலிருந்து யாதொரு பலனையும் அடைய மாட்டார்கள் இன்னும், அல்லாஹ் காஃபிரான மக்களை நேர் வழியில் செலுத்துவதில்லை. (2:264)

ஹதீஸ்கள்.

1. நபி(ஸல்) அவர்கள் நவில தாம் செவிமடுத்ததாக அபூ ஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள். கியாமத் நாளில் முதன் முதலாகத் தீர்ப்பு வழங்கப்படுபவர் அல்லாஹ்வின் பாதையில் ஷஹீதான மனிதராவார். அவர் கொண்டு வரப்படுவார். அல்லாஹ் தான் அவருக்கு அருளிய அருட்கொடைகளை (ஒவ்வொன்றாக) எடுத்துரைப்பான். அவர் அவைகளைப் புரிந்து கொண்டு விடுவார். (பின்னர்) அவ்வருட்கொடைகளின் விஷயத்தில் (நமக்கு நன்றி செலுத்தி) நீ என்ன அமல் (நற்செயல்) செய்தாய்? என அவரிடம் அல்லாஹ் கேட்பான். அதற்கவர் நான் உன் பாதையில் போர் செய்து ஷஹீதானேன். எனக் கூறுவார். அதற்கு அல்லாஹ் கூறுவான். நீ பொய் கூறி விட்டாய். நீ புத்திக் கூர்மையான மாவீரன் என (மக்களால்) புகழப்படுவதற்காகவே போர் செய்தாய். அவ்வாறு உன்னை உலகில் புகழ்ந்து கூறப்பட்டுவிட்டது. பின்னர் அல்லாஹ் உத்தரவிடுவான். அவரை முகம் குப்புற இழுத்துச் செல்லப்பட்டு நரகில் தள்ளப்படும்.

பிறகு கல்வியைக் கற்று கற்றுத்தந்து குர்ஆனை ஓதிய அறிஞரின் விஷயத்தில் தீர்ப்புச் செய்யப்படும். அவர் கொண்டு வரப்படுவார். அவருக்குத் தான் செய்த (கொடுத்த) அருட்கொடைகளை அல்லாஹ் எடுத்துரைப்பான். அவற்றை அவர் புரிந்து கொள்வார். அவற்றின் விஷயத்தில் (நமக்கு நன்றி செலுத்த) நீ என்ன அமல் செய்தாய்? என அல்லாஹ் கேட்பான். அதற்கவர் நான் கல்வியைக் கற்று மற்றவருக்குக் கற்றுக் கொடுத்தேன். உனக்காக குர்ஆனை ஓதினேன். எனக் கூறுவார். அதற்கு அல்லாஹ் நீ பொய் கூறிவிட்டாய் நீ அறிஞன் எனப் புகழப்பட வேண்டும் எனக் கல்வியைக் கற்றாய் காரீ (குர்ஆன் ஓதுபவர்) எனப் புகழப்பட குர்ஆனை ஓதினாய் எனக் கூறுவான் பின்னர் அல்லாஹ் உத்தரவிடுவான் அவரை முகங்குப்புற இழுத்துச் செல்லப்பட்டு நரகில் தள்ளப்படும்.

பின்னர் தீர்ப்பளிக்கப்படுபவர் அல்லாஹ் விஸ்தீரணமாக அனைத்து வகைச் செல்வங்களையும் வழங்கியிருந்த மனிதராவார். அவர் கொண்டு வரப்படுவார். அவருக்குத் தான் செய்த (கொடுத்த) அருட்கொடைகளை அல்லாஹ் எடுத்துரைப்பான். அவரும் அவற்றைப் புரிந்து கொள்வார். நீ அவற்றின் விஷயத்தில் (நமக்கு நன்றி செலுத்த) என்ன அமல் செய்தாய்? என்று அல்லாஹ் கேட்பான் அதற்கவர் என் செல்வத்தை நீ விரும்பும் எந்த வழியிலும் உனக்காகச் செலவழிக்காமல் நான் விட்டு வைக்கவில்லை என்று கூறுவார். அதற்கு அல்லாஹ் நீ பொய் கூறிவிட்டாய். கொடையாளி என உன்னைப் புகழப்படுவதற்காகச் செலவு செய்தாய். அவ்வாறு உன்னைப் புகழப்பட்டுவிட்டது என்று கூறுவான் பின்னர் அல்லாஹ் உத்தரவிடுவான். அவரை முகங்குப்புற இழுத்துச் செல்லப்பட்டு நரகில் தள்ளப்படும். நூல். புகாரி (1617)

2. மூன்று மனிதர்களுடன் அல்லாஹ் பேசமாட்டான் கிருபையுடன் பார்க்கவும் மாட்டான் தூய்மைப் படுத்தமாட்டான். அவர்களுக்கு கடும் வேதனையுண்டு என நபி(ஸல்) அவர்கள் மும்முறை கூற அபூதர் (ரலி) நபி(ஸல்)அவர்களிடம் அல்லாஹ்வின் தூதரே! அத்தகையவர்கள் நாசமாகட்டும் கைசேதத்திற் குள்ளாகட்டும்! அவர்கள் யார் என வினவ நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் 1. கரண்டைக்கு கீழ் பெருமைக்கு ஆடை அணிபவன் 2. செய்த தர்மத்தை சொல்லிக் காண்பிப்பவன் 3. பொய்ச்சத்தியம் செய்து வியாபாரம் செய்தவன். நூல். முஸ்லிம் அறிவிப்பவர். அபூதர் (ரலி)

3. மூன்று பேர் சுவர்க்கத்திற்குள் நுழைய முடியாது 1. ஏமாற்றுபவன். 2. கஞ்சன் 3. தான் செய்யும் உதவியை பிறர் புகழ செய்பவன். என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல். நஸயீ, திர்மிதி அறிவிப்பவர். அபூபக்கர் ஸித்தீக் (ரலி)

4. மூவரை நரக நெருப்பு தீண்டுவதை தவிர்க்க வியலாது 1. செய்கிற உதவியை பிறர் புகழச் செய்பவன் 2. பெற்றோருக்கு கீழ்படியாதவன் 3. நிரந்தரக் குடிகாரன் மற்றொருஅறிவிப்பில் 1. செய்த உதவியைச் சொல்லிக் காண்பிப்பவன் 2. பெற்றோருக்குக் கீழ் படியாதவன் 3. விதியை மறுப்பவன். இம் மூவரின் கடமையான மற்றும் மேலதிக வணக்க வழிபாடுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது நூல். ஹாக்கீம் அறிவிப்பவர். அபூதர் (ரலி)

## 29. தான் செய்யாததை (ப்பிறர் செய்ய)க் கூறுதல்

---

ஈமான் கொண்டவர்களே! நீங்கள் செய்யாததை ஏன் சொல்கிறீர்கள்?

நீங்கள் செய்யாததை நீங்கள் கூறுவது அல்லாஹ்விடம் பெரிதும் வெறுப்புடையதாக இருக்கிறது. (61:2,3)

ஹதீஸ்கள்.

1. ஒரு மார்க்க அறிஞர் பிறரிடம் மார்க்க விஷயங்களை எடுத்துக் கூறி அமல் செய்யக் கூறிவிட்டுத்தாம் அவ்வாறு செய்யாதிருப்பாராயின் மறுமையில் அவரது உதடுகள் (நெருப்புக்) கத்தரியால் துண்டிக்கப்படும். நூல். முஸ்லீம் அறிவிப்பவர். உஸாமா பின் ஜைத் (ரலி)

2. ஒரு மனிதன் நரகில் வீசப்படுவான். அவனது வயிற்றிலிருந்து குடல் சரிந்து அதனை செக்கில் கழுதை சுற்றுவது போல் அவன் சுற்றிச் சுற்றி வருவான் நரகவாசிகள் அவனைச் சூழ்ந்து கொண்டு வியப்புடன் உனக்கு ஏன் இப்படி மார்க்கத்தை நன்கு கற்றறிந்து எங்களுக்கு அறிவுரை கூறியவனாயிற்றே என்று கூற அம்மனிதன் நான் உங்களுக்கு அறிவுரை கூறினேன் நான் அவ்வாறு நடக்கவில்லை என்று கூறுவான். நூல். புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். உஸாமா பின் ஜைத் (ரலி)

3. சில சுவனவாசிகள் சில நரகவாசிகளை நோக்கி நீங்கள் எவ்வாறு நரகில் நுழைந்தீர்கள்? பூவுலகில் நீங்கள் செய்த அறிவுரையின் பிரகாரம் நடந்ததால் நாங்கள் சுவனத்தில் உள்ளோம். அறிவுரைப்படி நடந்த எங்களுக்கு சுவனமும் அறிவுரை செய்த நீங்கள் நரகிலும் ஏன்? என்று வினவ அந்நரக வாசிகள் நன்மையை ஏவித் தீமையைப் போதித்த நாங்கள் நன்மையைச் செய்யவுமில்லை தீமையைத் தடுக்கவுமில்லை. ஆகவே சொன்னதைச் செய்யாத குற்றத்திற்கு நாங்கள் தண்டனைக்குள்ளாகி நரகில் உள்ளோம் எனப் பதில் கூறுவர். நூல். பஸ்ஸார் அறிவிப்பவர். வலீத் பின் அக்வா (ரலி)

4. தாம் போதிப்பதை செயல் வடிவம் கொடுக்காத மார்க்க அறிஞர் (செய்யாததை சொல்பவர்) ஒரு விளக்கு போன்றவர் அது தன்னை எரித்துக் (மெழுகுவர்த்தி) கொண்டு கருகிப் பிறருக்கு ஒளிவழங்குகிறது. நூல். பைஹகீ அறிவிப்பவர். ஜூ ன்துப் பின் அப்தில்லாஹ் (ரலி)

5. தாம் போதிப்பதை செயல் வடிவம் கொடுக்காத மார்க்க அறிஞர் மறுமைநாளில் கடும் தண்டனைக்குள்ளாவார். நூல். பைஹகீ, தப்ரானீ அறிவிப்பவர். அபூஹூ ரைரா (ரலி)

## 30. பிற உயிர்களைத் துன்புறுத்துதல்

---

மேலும், அல்லாஹ்வையே வழிபடுங்கள் அவனுடன் எதனையும் இணை வைக்காதீர்கள். மேலும், தாய் தந்தையர்க்கும், நெருங்கிய உறவினர்களுக்கும். அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், அண்டை வீட்டிலுள்ள உறவினர்களுக்கும், அருகிலுள்ள அண்டை வீட்டாருக்கும், (பிரயாணம், தொழில் போன்றவற்றில்) கூட்டாளிகளாக இருப்போருக்கும், வழிப்போக்கர்களுக்கும், உங்களிடமுள்ள அடிமைகளுக்கும் அன்புடன் உபகாரம் செய்யுங்கள் நிச்சயமாக அல்லாஹ் கர்வமுடையோராக, வீண் பெருமை உடையோராக இருப்பவர்களை நேசிப்பதில்லை. (4:36)

ஹதீஸ்கள்.

1. ஒரு விலங்கின் அங்கங்களை (வீணாக) சிதைத்தவனின் உடல் அங்கங்களை மறுமையில் அல்லாஹ் சிதைப்பான். நூல். அஹ்மத் அறிவிப்பவர். இப்னு உமர் (ரலி)

2. ஒரு விலங்கினைத் தம்மிடம் வைத்திருக்கும் ஒருவன் அதற்கு உணவு புகட்டும் பொறுப்பிலிருக்கிறான். அதற்கு புல் பூண்டுகளை உண்ணக்கொடுக்கவோ அல்லது அதன் உணவை அவ்விலங்கு தானே மேய்ந்து (தேடி) க் கொள்ளவோ விட்டு விடவேண்டும் அதனைத் தடுப்பதுவே ஒருவன் பாவி என்பதற்குப் போதுமானதாகும். நூல். புகாரி அறிவிப்பவர். அபூஹூ ரைரா (ரலி)

3. எவன் குறிபார்த்து அம்பெய்'(தப்பழகு) வதற்கு எந்த விலங்கையும் இலக்காக்குகிறானோ அவனை அல்லாஹ் சபிப்பானாக! என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல். புகாரி அறிவிப்பவர். இப்னு உமர் (ரலி)

4. ஒரு பெண் பூனை ஒன்றைக் கட்டிபோட்டுக் கொடுமைப் படுத்தினாள் அதற்கு உணவு உண்ணக் கொடுக்காமல் அது தன் உணவைத் தேடுவதையும் கட்டிப்போட்டு தடை செய்திருந்தாள். இறுதியில் அப்பூனை அவள் இழைத்த கொடுமையால் மடிந்தது. அதன் காரணமாக அல்லாஹ் அப்பெண்ணை நரகிலிட்டான். நூல். புகாரி அறிவிப்பவர். இப்னு உமர் (ரலி)

5. மிருகங்களை முகத்தில் (இரத்தம் வருமளவிற்கு) அடையாளம் இடுபவரை நபி (ஸல்) அவர்கள் சபித்தார்கள் மற்றொரு அறிவிப்பில் மிருகங்களின் முகத்தில் அடிப்பதைத் தடை செய்தார்கள். நூல். முஸ்லீம் அறிவிப்பவர். இப்னு அப்பாஸ் (ரலி)

## 31. களவு, வழிப்பறி

---

திருடனோ திருடியோ அவர்கள் சம்பாதித்த பாவத்திற்கு, அல்லாஹ்விடமிருந்துள்ள தண்டனையாக அவர்களின் கரங்களைத் தரித்து விடுங்கள். அல்லாஹ் மிகைத்தவனும், ஞானம் மிக்கோனுமாக இருக்கின்றான். (5:38)

அல்லாஹ்வுடனும் அவன் தூதருடனும் போர் புரிந்து, பூமியில் குழப்பம் செய்து கொண்டு திரிபவர்களுக்குத் தண்டனை இதுதான் (அவர்கள்) கொல்லப்படுவதல், அல்லது தூக்கிலிடப்படுதல், அல்லது மாறுகால் மாறு கை வாங்கப்படுதல், அல்லது நாடு கடத்தப்படுதல் இது அவர்களுக்கு இவ்வுலகில் ஏற்படும் இழிவாகும் மறுமையில் அவர்களுக்கு மிகக்கடுமையான வேதனையுமுண்டு. (5:33)

ஹதீஸ்கள்.

1. மூன்று திர்ஹம்கள் மதிப்புள்ள ஒரு பொருளைத் திருடியவனின் கையை நபி(ஸல்) துண்டிக்க தீர்ப்பளித்துள்ளனர் மற்றொரு அறிவிப்பில் கால் தீனாருக்கும் அதிகம் மதிப்புள்ள பொருளைத் திருடியவனின் கையைத் துண்டிக்கவும் அதற்குக் குறைவான மதிப்புள்ள வற்றில் கையை வெட்டாதீர்கள் எனவும் நபி(ஸல்) கூறினார்கள். நூல். புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். இப்னு உமர் (ரலி)

2. மக்ஸூமி குலத்தைச் சார்ந்த ஒரு பெண்மணி திருடிவிட்ட விஷயம் குறைஷியர்கள் அதிக கவலையில் ஆழ்த்தியது. எனவே அவர்கள் ஒன்று கூடி இப்பெண்மணி விஷயமாக நபி(ஸல்) அவர்களிடம் யார் பேசுவது? என கலந்தாலோசித்தனர். உஸாமா பின் ஜைது (ரலி)(நபி(ஸல்)அவர்களுக்கு பிரியமானவர் என்பதால்)அவர்களை அனுப்ப தீர்மானித்தனர் உஸாமா (ரலி) நபி(ஸல்) அவர்களிடம் பேசினார்கள் இதனைச் செவியுற்ற நபி(ஸல்) அவர்கள் கோபமடைந்து அல்லாஹ்வின் தண்டனைகளில் ஒன்றின் விஷயத்தில் நீர் என்னிடம் தவறான பரிந்துரை செய்கிறீரா? என்று கூறிவிட்டு எழுந்து சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். உங்களுக்கு முன் சென்ற சமூகத்தினரின் அழிவக்கு காரணம் செல்வந்தர்கள் திருடினால் அவர்களை விட்டு விடுவதும் ஏழைகள் திருடினால் தண்டிப்பதும் போன்ற அநீதி இழைத்ததால் தான்! அல்லாஹ்வின் மீது சத்தியமாக! ஒரு வேளை முஹம்மதின் மகள் பாத்திமா திருடியிருந்தாலும் அவரின் கையையும் நான் வெட்டுவேன் எனக் கூறினார்கள். நூல். புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். ஆயிஷா (ரலி)

3. நபித் தோழர் அபூஸூஃப்யான் (ரலி) அவர்களின் மனைவி ஹிந்தா(ரலி) அவர்கள் நபி(ஸல்) அவர்களிடம் என் கணவர் கஞ்சத்தனமானவர் எனக்கும் என் குழந்தைகளுக்கும் (சிலவுக்கு)தேவையானதை கொடுப்பதில்லை. அவருக்குத் தெரியாமல் அவரிடமிருந்து நான் எடுத்துக் கொண்டாலே தவிர என முறையிட்டார். அதற்கு நபி(ஸல்) அவர்கள் உமக்கும் உம் பிள்ளைகளுக்கும் போதுமானதை நீர் அவரிடம் எடுத்துக்கொள்வீராக! எனக் கூறினார்கள். நூல். புகாரி, முஸ்லிம்

4. ஒருவன் திருடினால் கையை வெட்டுங்கள் மீண்டும் அதே குற்றத்தைச் செய்தால் காலை வெட்டுங்கள் மீண்டும் செய்தால் மறுகையை வெட்டுங்கள் மீண்டும் செய்தால் மறுகாலை வெட்டுங்கள் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல். அபூதாவூத், நஸயீ

## 32. கற்ற கல்வியை மறைத்தல்

---

நாம் அருளிய தெளிவான அத்தாட்சிகளையும், நேர்வழியையும்-அதனை நாம் வேதத்தில் மனிதர்களுக்காக விளக்கிய பின்னரும் - யார் மறைக்கின்றார்களோ, நிச்சயமாக அவர்களை அல்லாஹ் சபிக்கிறான் மேலும் அவர்களைச் சபிப்ப(தற்கு உரிமை உடைய)வர்களும் சபிக்கிறார்கள். (2:159)

தவிர வேதம் கொடுக்கப்பட்டோரிடம் அவர்கள் அதை மக்களுக்குத் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும், அதை மறைக்கக் கூடாது என்று அல்லாஹ் உறுதி மொழி வாங்கியதை (அம்மக்களுக்கு நபியே! நீர் நினைவுபடுத்துவீராக) அப்பால், அவர்கள் அதைத் தங்கள் முதுகுகளுக்குப் பின்னால் எறிந்து விட்டு அதற்குப் (பதிலாகச்) சொற்ப கிரயத்தைப் பெற்றுக் கொண்டார்கள் - அவர்கள் (இவ்வாறு) வாங்கிக் கொண்டது மிகக் கெட்டதாகும். (3:187)

ஹதீஸ்கள்.

1. எவரொருவர் ஒரு விஷயத்தைப் பற்றியுள்ள அறிவைப் பெற்றிருந்தும் அதை மறைக்கிறாரோ அவர் கியாம நாளில் நரக நெருப்பினால் கடிவாளமிடப்படுவார். நூல். அபூதாவூத், திர்மிதி அறிவிப்பவர். அபூஹுரைரா (ரலி)

2. அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தைத் தேடும் கல்வியை உலகின் பொருட்களை அடைந்து கொள்ளும் நோக்குடன் ஒருவர் கற்றால் கியாம நாளில் அவர் சுவன வாடையைக் கூட நுகர மாட்டார். நூல். அபூதாவூத் அறிவிப்பவர். அபூஹுரைரா (ரலி)

3. அறிஞர்களிடம் வாதிட்டு வெல்லவும் பாமர மக்களிடம் தாம் அறிவாளி எனப் புகழப்படவும் மக்களைத் தன் பால் ஈர்க்கவும் கல்வி கற்பவனை அல்லாஹ் நரகில் நுழைவிப்பான். நூல். திர்மிதி

4. கற்றவன் ஒருவனிடம் மார்க்க சம்மந்தமான ஒரு கேள்வி கேட்டதற்கு அதற்குறிய சரியான விட அறிந்திருந்தும் அதை மறைப்பவனுக்கு மறுமையில் நெருப்பு கடிவாளமிடப்படும். நூல். முஸ்லிம்

## 33. அந்நிய ஆண் பெண் தனித்திருத்தல், ஆண் பெண் போல் ஒப்பனை

(நபியே!) முஃமின்களான ஆடவர்களுக்கு நீர் கூறுவீராக அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும் தங்கள் வெட்கத் தலங்களைப் பேணிக்காத்துக் கொள்ள வேண்டும் அது அவர்களுக்கு மிகப் பரிசுத்தமானதாகும் நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்பவற்றை நன்கு தெரிந்தவன். (24:30)

கண்கள் செய்யும் மோசத்தையும், உள்ளங்கள் மறைத்து வைப்பதையும் அவன் நன்கு அறிகிறான். (40:19)

முஃமின்களே! (உங்களுடைய நபி) உங்களை உணவு அருந்த அழைத்தாலன்றியும், அது சமையலாவதை எதிர்பார்த்தும் (முன்னதாகவே) நபியுடைய வீடுகளில் பிரவேசிக்காதீர்கள் ஆனால், நீங்கள் அழைக்கப் பட்டீர்களானால் (அங்கே) பிரவேசியுங்கள் அன்றியும் நீங்கள் உணவருந்தி விட்டால் (உடன்) கலைந்து போய் விடுங்கள் பேச்சுகளில் மனங்கொண்டவர்களாக (அங்கேயே) அமர்ந்து விடாதீர்கள் நிச்சயமாக இது நபியை நோவினை செய்வதாகும் இதனை உங்களிடம் கூற அவர் வெட்கப்படுவார் ஆனால் உண்மையைக் கூற அல்லாஹ் வெட்கப்படுவதில்லை நபியுடைய மனைவிகளிடம் ஏதாவது ஒரு பொருளை (அவசியப்பட்டுக்) கேட்டால், திரைக்கு அப்பாலிருந்தே அவர்களைக் கேளுங்கள். அதுவே உங்கள் இருதயங்களையும் அவர்கள் இருதயங்களையும் தூய்மையாக்கி வைக்கும் அல்லாஹ்வின் தூதரை நோவினை செய்வது உங்களுக்கு தகுமானதல் அன்றியும் அவருடைய மனைவிகளை அவருக்குப் பின்னர் நீங்கள் மணப்பது ஒருபோதும் கூடாது நிச்சயமாக இது அல்லாஹ்விடத்தில் மிகப்பெரும் (பாவ) காரியமாகும். (33:53)

ஹதீஸ்கள்.

1. அந்நியப் பெண்கள் மீது பார்வை திடீரென்று பட்டு விடுவதைப் பற்றி நான் நபி(ஸல்) அவர்களிடம் கேட்டேன். அதற்கு நபிகளார் உம் பார்வையைத் திருப்பிக் கொள்வீராக எனக் கூறினார்கள். நூல். முஸ்லிம் அறிவிப்பவர். ஜரீர் (ரலி)

2. ஒரு ஆண் மற்றொரு ஆணின் மறைவிடத்தையும் ஒரு பெண் மற்றொரு பெண்ணின் மறைவிடத்தையும் பார்க்க கூடாது. ஒரு ஆண் மற்றொரு ஆனுடனும் ஒரு பெண் மற்றொரு பெண்ணுடனும் ஓரே ஆடையில் சேர்ந்திருக்க கூடாது. என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல். முஸ்லிம் அறிவிப்பவர். அபூஸயீது (ரலி)

3. உங்களில் ஒருவர் ஓர் அந்நியப் பெண்ணிடம் அவளுடைய தந்தை, சகோதரர், மகன் போன்ற உறவினர்கள் உடனிருந்தாலன்றி தனிமையில் தங்கவேண்டாம் மற்றொரு அறிவிப்பில் நபித் தோழர் ஒருவர் கணவனின் சகோதரர் போன்ற நெருங்கிய உறவினர்கள் தனித்திருக்கும் பெண்ணிடம் செல்லாமா? என்று நபி(ஸல்) அவர்களிடம் வினவிய போது கணவரின் உறவினர்கள் மரணத்தைப் போன்றவர்கள் ஆவர் எனப்பதிலளித்தார்கள். நூல். புகாரி முஸ்லிம் அறிவிப்பவர். உக்பா பின் ஆமிர் (ரலி)

4. ஆண் போன்று வேடமிடும் பெண்களையும், பெண் போன்று வேடமிடும் ஆண்களையும் நபி(ஸல்) அவர்கள் சபித்தார்கள். மற்றொரு அறிவிப்பில் ஆண்களின் ஆடையை அணியும் பெண்ணையும் பெண்களின் ஆடையை அணியும் ஆணையும் நபி(ஸல்)அவர்கள் சபித்தார்கள். நூல்.புகாரி,அபூதாவூத் அறிவிப்பவர். இப்னு அப்பாஸ் (ரலி)

5. பெண்கள் தலைமுடியைச் சிரைத்துக் கொள்வதை நபி(ஸல்) அவர்கள் விலக்கியுள்ளார்கள். நூல். நஸயீ அறிவிப்பவர். அலீ (ரலி)

6. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் இரு கூட்டத்தினர் நரகவாசிகள் ஆவர் அவர்களை நான்பார்த்ததில்லை (பிற்காலத்தில் வருவார்) 1. பசு மாட்டின் வால் போன்று சாட்டைகளால் மக்களை அடித்துத் துன்புறுத்தும் ஒரு கூட்டம் 2. ஆடைகளைத் திறந்து அறைகுறை நிர்வாணப் பெண்கள் மறுகூட்டம் பிறரைத் தம் பக்கம் கவர்ந்திழுப்பர் பிறரால் கவரப் பட்டு அவர்கள் பக்கம் சாய்வர் அப்பெண்களின் கூந்தல்கள் ஒட்டகையின் சாய்ந்த திமில்கள் போல் இருக்கம். இவர்கள் சுவனில் நுழைய மாட்டார்கள் அதன் வாடையைக் கூட நுகர மாட்டார்கள். நூல். முஸ்லிம் அறிவிப்பவர். அபூஹூ ரைரா (ரலி)

7. ஒரு பெண் மற்றொரு பெண்ணுடன் ஆடைகள் திறந்தவளாகச் சேரவேண்டாம். ஏனெனில் அவள் இவளைப் பற்றித் தன் கணவனிடம் அப்பெண் நேரடியாய் பார்ப்பது போல் வர்ணிப்பாள். நூல். புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். இப்னு அப்பாஸ் (ரலி)

## 34. ஆட்சி அதிகாரம்

---

(நபியே!) நீர் கூறுவீராக் "அல்லாஹ்வே! ஆட்சிகளுக்கெல்லாம் அதிபதியே! நீ யாரை விரும்புகிறாயோ அவருக்கு ஆட்சியைக் கொடுக்கின்றாய் இன்னும் ஆட்சியை நீ விரும்புவோரிடமிருந்து அகற்றியும் விடுகிறாய் நீ நாடியோரை கண்ணியப்படுத்துகிறாய் நீ நாடியவரை இழிவு படுத்தவும் செய்கிறாய் நன்மைகள் யாவும் உன் கைவசமேயுள்ளன அனைத்துப் பொருட்கள் மீதும் நிச்சயமாக நீ ஆற்றலுடையவனாக இருக்கின்றாய்." (3:26)

அந்த மறுமையின் வீட்டை, இப்பூமியில் (தங்களைப்) பெருமைப்படுத்திக் கொள்ளவும், குழப்பத்தை உண்டாக்கவும் விரும்பாதிருப்பவர்களுக்கே நாம் சொந்தமாக்கி வைப்போம் ஏனெனில், பயபக்தியுடையவர்களுக்கே (மேலான) முடிவு உண்டு. (28:83)

ஹதீஸ்கள்.

1. வருங்காலத்தில் நீங்கள் தலைமைப் பதவியை ஆசைப்படுவீர்கள் ஆனால் அது கியாமநாளின் கைசேதமாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல். புகாரி அறிவிப்பவர். அபூஹுரைரா(ரலி)

2. நபி(ஸல்) அவர்கள் என்னிடம் நீர் அதிதாரத்தை கேட்காதீர் நீர் கேட்காமலேயே அது உமக்கு வழங்கப்படுமானால் அதன் மீது உதவி செய்யப்படும் நீர் கேட்டு அதிதாரத்தை உமக்கு வழங்கப்படுமெயானால் அதனளவில் நீர் சாட்டப்பட்டு விடுவீர் உமக்கு உதவி இருக்காது. நூல். புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். அப்துர் ரஹ்மான் பின் ஸமுரா (ரலி)

3. நான் நபி(ஸல்) அவர்களிடம் அல்லாஹ்வின் தூதரே! தாங்கள் என்னை ஆட்சிப்பதவியில் நியமனம் செய்யக்கூடாதா? என்று கேட்டேன் அதற்கு அண்ணலார் தங்களின் கரத்தால் என் தோள் புஜத்தில் அடித்து விட்டுப் பின்னர் கூறினார்கள் ஓ! அபூதரே! நிச்சயமாக ஆட்சி அதிகாரம் என்பது ஒரு அமானிதமாகும் (நம்பிக்கைகுறிய பொறுப்பு) உலகில் அதற்கு அதிக மதிப்பு இருப்பினும் கியாமநாளில் அது இழிவும் கைசேதமாகும் அதன் உரிமைகளைக் கொண்டு சரிவர கடமைகளை நிறைவேற்றினாலேயொழிய நூல். முஸ்லிம் அறிவிப்பவர். அபூதர் (ரலி)

4. நபி(ஸல்) அவர்களின் சமீபம் நானும் என் சிறிய தந்தையின் மகன்கள் இருவரும் சென்றோம். அப்பொழுது என் சிறிய தந்தையின் மகன்களில் ஒருவர் அல்லாஹ்வின் தூதரே! தாங்களுக்கு அல்லாஹ் வழங்கியுள்ள ஆட்சி அதிகாரப் பகுதிகளில் சிலவற்றில் எங்களை ஆட்சித் தலைவராக நியமனம் செய்வீர்களாக! எனக் கூற நபி(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் மீதாணையாக! இப்பதவியை நிச்சயமாக கேட்பவர் எவருக்கும் ஆசைப் படுகின்ற எவருக்கும் நாம் அளிக்க மாட்டோம் எனக் கூறிவிட்டார்கள். நூல். புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். அபூ மூஸா அல் அஷ்அரீ (ரலி)

## 35. பாரபட்சம் (பாகுபாடு)காட்டுதல்

---

இன்னும் உங்கள் மனைவியர் விட்டுச் சென்றதில் - அவர்களுக்குப் பிள்ளை இல்லாதிருந்தால் உங்களுக்குப் பாதி பாகம் உண்டு அவர்களுக்குப் பிள்ளை இருந்தால் அவர்கள் விட்டுச் சென்றவற்றிலிருந்து உங்களுக்கு கால் பாகம்தான் - (இதுவும்) அவர்கள் செய்திருக்கிற மரண சாஸனத்தையும், கடனையும் நிறைவேற்றிய பின்னர்தான் - தவிர உங்களுக்குப் பிள்ளையில்லாதிருப்பின் நீங்கள் விட்டுச் சென்றதிலிருந்து அவர்களுக்குக் கால் பாகம்தான் உங்களுக்குப் பிள்ளை இருந்தால், அப்போது அவர்களுக்கு நீங்கள் விட்டுச் சென்றதில் எட்டில் ஒரு பாகம்தான் (இதுவும்) நீங்கள் செய்திருக்கும் மரண சாஸனத்தையும் கடனையும் நிறைவேற்றிய பின்னரேதான் தந்தை, பாட்டன் போன்ற முன் வாரிசுகளோ அல்லது பிள்ளை, பேரன் போன்ற பின் வாரிசுகளோ இல்லாத ஓர் ஆணோ அல்லது பெண்ணோ - இவர்களுக்கு ஒரு சகோதரனோ அல்லது சகோதரியோ இருந்தால் - அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆறில் ஒரு பாகம் உண்டு ஆனால் இதற்கு அதிகமாக இருந்தால் அவர்கள் மூன்றில் ஒரு பாகத்தில் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளவேண்டும் - (இதுவும்) அவர்களின் மரண சாஸனமும் கடனும் நிறைவேற்றிய பின்னர்தான் ஆனால் (மரண சாஸனத்தைக் கொண்டு வாரிசுகள்) எவருக்கும் நஷ்டம் ஏற்படக் கூடாது (இது) அல்லாஹ்வினால் விதிக்கப்பட்டதாகும் இன்னும்

அல்லாஹ் (யாவற்றையும்) நன்கறிந்தவனாகவும், மிக்க பொறுமையுடையோனுமாகவும் இருக்கின்றான். (4:12)

நம்பிக்கை கொண்டவர்களே! உங்களில் ஒருவருக்கொருவர் பொருந்திக் கொள்ளும் முறையில் ஏற்படுகிற வர்த்தகம் அல்லாமல், ஒருவர் மற்றொருவரின் பொருட்களை தவறான முறையில் உண்ணாதீர்கள் நீங்கள் உங்களையே கொலைசெய்து கொள்ளாதீர்கள் - நிச்சயமாக அல்லாஹ் உங்களிடம் மிக்க கருணையுடையவனாக இருக்கின்றான். (4:129)

அநாதை(ப் பெண்களைத் திருமணம் செய்து அவர்)களிடம் நீங்கள் நியாயமாக நடக்க முடியாது என்று பயந்தீர்களானால், உங்களுக்குப் பிடித்தமான பெண்களை மணந்து கொள்ளுங்கள் - இரண்டிரண்டாகவோ, மும்மூன்றாகவோ, நன்னான்காவோ ஆனால், நீங்கள் (இவர்களிடையே) நியாயமாக நடக்க முடியாது என்று பயந்தால் ஒரு பெண்ணையே (மணந்து கொள்ளுங்கள்), அல்லது உங்கள் வலக்கரங்களுக்குச் சொந்தமான (ஓர் அடிமைப் பெண்ணைக் கொண்டு) போதுமாக்கிக் கொள்ளுங்கள் - இதுவே நீங்கள் அநியாயம் செய்யாமலிருப்பதற்குச் சுலபமான முறையாகும். (4:3)

ஹதீஸ்கள்.

1. அன்னை உம்முஸலாமா (ரலி) நபி(ஸல்) அவர்களிடம் யாரசூலுல்லாஹ்! அபூஸலாமாவின் (முந்திய கணவருக்கு நான் பெற்ற) பிள்ளைகளுக்கு நான் செலவு செய்வதில் எனக்கு நற்கூலி உண்டா? அவர்களை நான் உணவைத் தேடி அலைய விட முடியாது அவர்கள் என்பிள்ளைகள் எனக் கூறினேன்அதற்கு நபி(ஸல்) அவர்கள் ஆம்! அப்பிள்ளைகளுக்கு செலவழிப்பதற்காக உமக்கு அல்லாஹ்விடம் நற்கூலி உண்டு. எனக் கூறினார்கள். நூல் புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். உம்முஸலாமா (ரலி)

2. நுஃமான் பின் பஷீர் (ரலி) அவர்களின் தந்தை நபி(ஸல்) அவர்களிடம் வந்து நான் எனது மகன் நுஃமான் பின் பஷீருக்கு என் அடிமையை அன்பளிப்பாக அளித்து விட்டேன். எனக் கூறினார் அதற்கு நபிகளார் உம் பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் இவ்வாறு அன்பளிப்பு வழங்கினீரா? என்று வினவ அதற்கு அவர் இல்லைஎனப் பதிலளித்தார் அப்படியானால் நீர் உம் மகனுக்கு அளித்த இந்த அன்பளிப்பைப் திரும்ப எடுத்தக் கொள்வீராக! என்று நபி(ஸல்) கூறினார்கள் (நியாயமற்ற பாகு பாட்டை தவிர்க்க நபிகள் கூறினார்கள்)

3. ஒருவர் தமது இருமனைவியரில் பாகுபாடு காட்டி நடந்தால் மறுமையில் அவர் எழுப்பப்படும் போது ஒரு புறம் சாய்ந்தவராக வருவார். நூல். திர்மிதி

## 36. அசுத்தமும், அசிங்கமும்

---

ஆதமுடைய மக்களே! ஒவ்வொரு மஸ்ஜிதிலும் தொழுங்காலம் உங்களை ஆடைகளால் அழகாக்கிக் கொள்ளுங்கள் உண்ணுங்கள், பருகுங்கள் எனினும் வீண் விரயம் செய்யாதீர்கள். ஏனெனில் அல்லாஹ் அளவு கடந்து (வீண்) விரயம் செய்பவர்களை நேசிப்பதில்லை. (7:31)

மாதவிடாய் பற்றியும் உம்மிடம் வினவுகிறார்கள் நீர் கூறும் “அது (ஓர் உபாதையான) தீட்டு ஆகும் ஆகவே மாதவிடாயின் போது பெண்களை விட்டும் விலகியிருங்கள் அவர்கள் தூய்மையாகும் வரை அவர்களை அனுகாதீர்கள் அவர்கள் தூய்மையடைந்த பின் அல்லாஹ் எப்படி

கட்டளையிட்டிருக்கின்றானோ அதன்படி அவர்களிடம் செல்லுங்கள் பாவங்களைவிட்டு மீள்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் நேசிக்கிறான் இன்னும் தூய்மையாக இருப்போரையும் நேசிக்கின்றான்." (2:222)

உம் ஆடைகளைத் தூய்மையாக ஆக்கி வைத்துக் கொள்வீராக.

அன்றியும் அசுத்தத்தை வெறுத்து (ஒதுக்கி) விடுவீராக. (74:4,5)

ஹதீஸ்கள்.

1. மக்களுக்கு நிழல் தரும் மரங்களின் அடியில் மல ஜலம் கழிப்பவர் அல்லது அதுபோன்ற கெட்ட பொருட்களை வீசுபவர் சபிக்கப்பட்டவராவார்.

மற்றொரு அறிவிப்பில் மக்கள் நடமாகும் வழி பாதைகளிலும் நிழல் பெறும் மரங்களின் அடியில் மலஜல கழிப்பவர் சபிக்கப்பட்டவராவார். நூல். அஹ்மத் அறிவிப்பவர். அபூஹுரைரா (ரலி)

2. மலஜலம் கழிக்கும் போது ஒருவர் மற்றவரின் மறைவான இடங்களை நோக்கிக் கொண்டு ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டுமிருப்பவர்களை நபி(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் எதிரிகள் என எச்சரித்துள்ளனர். நூல். அபூதாவூத் அறிவிப்பவர். அபூ ஸயீத் (ரலி)

3. நபி(ஸல்) அவர்கள் இரண்டு கப்ர்களை கடந்து சென்ற போது அதில் உள்ள இருவரும் வேதனை கொடுக்கப்படுகிறார்கள் அவர்கள் அவ்வாறு வேதனை செய்யப்படுவதின் காரணம் பெருங்குற்றத்திற்காக அல்ல. அவர்களில் ஒருவர் புறம் பேசியதற்காகவும் மற்றவர் சிறுநீர் கழித்தபின் அதனைச் சரியாகச் சுத்தம் செய்யாததற் காகவும் தான் என்று கூறினார்கள். நூல். ஹாக்கீம் அறிவிப்பவர். இப்னு அப்பாஸ் (ரலி)

4. தேங்கிக் கிடக்கும் நீரில் சிறுநீர் கழிப்பதை நபி(ஸல்) தடை செய்துள்ளார்கள் மற்றொரு அறிவிப்பில் சிறுநீர் கழித்து விட்டு சுத்தம் செய்வதில் அதிக எச்சரிக்கையுடன் இருங்கள் ஏனெனில் கப்ர் வேதனை இக்குற்றத்துக்கும் தரப்படுகிறது என்று கூறினார்கள். நூல். தப்ரானி அறிவிப்பவர். அபூ உமாமா (ரலி)

5. எவரொருவர் தம் மனைவியுடன் உடலுறவு கொண்ட பின் ஏற்படும் கடமையான குளிப்பை காலம் தாழ்த்துகிறாரோ அவரை விட்டும் அருள் மலக்குகள் விலகிச் செல்வார் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மற்றொருஅறிவிப்பில் எவரொருவர் தம் மனைவியுடன் அவள் மாதந்திர தீட்டுடன் இருக்கும் நிலையில் உடலுறவு கொள்கிறாரோ அவர் குர்ஆனை மறுத்தவராவார் என்று நபி(ஸல்) கூறினார்கள். நூல். திர்மிதி அறிவிப்பவர். அபூஹுரைரா (ரலி)

## 37. கணவன், மனைவி தம் ரகசியங்களை பிறருக்குக் கூறுதல்

---

(நன்மை செய்வோர் யார் எனின்) எவர்கள் (அறியாமல் ஏற்பட்டுவிடும்) சிறு பிழைகளைத் தவிர பெரும் பாவங்களையும் மானக்கேடானவற்றையும் தவிர்த்துக் கொள்கிறார்களோ அவர்கள் நிச்சயமாக உம்முடைய இறைவன் மன்னிப்பதில் தாராளமானவன் அவன் உங்களைப் பூமியிலிருந்து உண்டாக்கிய போதும், நீங்கள் உங்கள் அன்னையரின் வயிறுகளில் சிசுக்களாக இருந்த போதும், உங்களை நன்கு அறிந்தவன் - எனவே, நீங்களே உங்களைப் பரிசுத்தவான்கள் என்று புகழ்ந்து கொள்ளாதீர்கள் - யார் பயபக்தியுள்ளவர் என்பதை அவன் நன்கறிவான். (53:32)

ஆனால் எவர்கள் மக்களுக்கு அநியாயம் செய்து நீதமின்றி பூமியில் அட்டூழியம் செய்கிறார்களோ, அவர்கள் மீது தான் (குற்றம் சுமத்த) வழியிருக்கிறது - இத்தகையோருக்கு நோவினை செய்யும் வேதனையுண்டு. (42:42)

நிச்சயமாக, உம்முடைய இறைவன் கண்காணித்துக் கொண்டு இருக்கிறன்றான். (89:14)

ஹதீஸ்கள்.

1. கணவன், மனைவி தம் சந்திப்பின் (உடலுறவுக்கு) பின் அதன் மறைவான ரகசியங்களைப் பற்றி பிறருக்கு கூறுபவர்களே மிகக் கெட்டவர்கள் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மற்றொரு அறிவிப்பில் இவ்வாறு உடலுறவு ரகசியங்களைப் பிறருக்கு கூறுபவர்கள் பிறர்காண ஷைத்தானுடன் உடலுறவு கொண்டவர்கள் போலாவார்கள் என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். நூல். முஸ்லிம், அபூதாவூத் அறிவிப்பவர். அபூ ஸய்த் அல் குத்ரி (ரலி)

2. நீங்கள் ஸபா வைத்தவிர்ந்து கொள்ளுங்கள் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் ஸபா என்றால் உடலுறவைப் பற்றி பிறரிடம் பெருமையடித்தல் என்பதாகும். நூல். அஹ்மத் அறிவிப்பவர். அபூ ஸயீத் அல் குத்ரி (ரலி)

3. மூன்று கூட்டத்தினருக்கு சுவனம் தடுக்கப் பட்டுள்ளது. 1. மதுவில் மூழ்கி இருப்பவன். 2. பெற்றோரைத் துன்புறுத்துபவன். 3. தன் மனைவியைப் பிறருக்கு கூட்டிக் கொடுப்பவன் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல். அஹ்மத், ஹாக்கீம்

4.. கடன் வாங்கப்பட்ட கணவனை நீங்கள் அறிவீர்களா? என நபி(ஸல்) அவர்கள் வினவ நபித் தோழர்கள் அவர்கள் யார்? அல்லாஹ்வின் தூதரே! எனக் கேட்டனர் அதற்கு நபி(ஸல்) அவர்கள் எவன் ஹலாலா செய்கிறானோ அவனே. அவனையும் அவ்வாறு அவனைச் செய்யத் தூண்டுபவனையும் அல்லாஹ் சபிப்பானாக நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல். இப்னுமாஜா அறிவிப்பவர். இப்னு மஸ்ஊத் (ரலி)

(ஹலாலா என்பது தன்னால் விவாகரத்து செய்யப்பட்ட பெண்ணை மணந்து கொள்ள விரும்பும் கணவன் அவளைப் பிறர் ஒருவர் மணந்து விவாகரத்து செய்த பின்னரே மணந்துக் கொள்ள வியலும் ஆகவே விவாகரத்து செய்யப் பட்ட பெண்ணை மணக்கும் இரண்டாம் கணவன் முதல் கணவனுக்காக தலாக் கொடுப்பதே ஹலாலா ஆகும்)

## 38. அல்லாஹ்வையன்றி பிறர் மீது சத்தியம் செய்தல்

---

எதன்மீது. (அறுக்கும்போது) அல்லாஹ்வின் பெயர் கூறப்படவில்லையோ அதைப் புசியாதீர்கள் - நிச்சயமாக அது பாவமாகும் நிச்சயமாக ஷைத்தான்கள் தங்கள் நண்பர்களை உங்களோடு (வீண்) தர்க்கம் செய்யுமாறு தூண்டுகிறார்கள் - நீங்கள் அவர்களுக்கு வழிபட்டால், நிச்சயமாக நீங்களும் முஷ்ரிக்குகள் (இணைவைப்போர்) ஆவீர்கள். (6:121)

நீர் கூறும் “மெய்யாக என்னுடைய தொழுகையும், என்னுடைய குர்பானியும், என்னுடைய வாழ்வும், என்னுடைய மரணமும் எல்லாமே அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே சொந்தமாகும். (6:162)

எனவே, உம் இறைவனுக்கு நீர் தொழுது, குர்பானியும் கொடுப்பீராக. (108:2)

ஹதீஸ்கள்.

1. எவரொருவர் அல்லாஹ் அல்லாத பிற பொருட்களின் மீது சத்தியம் செய்கிறாரோ அவர் இணைவைப்பாளர் அல்லது நிராகரிப்பாளர் ஆவார் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல். திர்மிதி. அறிவிப்பவர். இப்னு உமர் (ரலி)

மற்றொரு அறிவிப்பில் அல்லாஹ் அல்லாத பிறர் மீது சத்தியம் செய்வது இணைவைப்பாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

2. உங்களின் தந்தையின் மீது சத்தியம் செய்யாதீர்கள் எவர் ஒருவர் அல்லாஹ்வின் மீது செய்யப்பட்ட சத்தியத்தில் திருப்தி கொள்ளவில்லையோ அவர் மீது அல்லாஹ்வும் திருப்பிகொள்வதில்லை. நூல். இப்னுமாஜா அறிவிப்பவர். இப்னு உமர் (ரலி)

3. அல்லாஹ் அல்லாத பெயர் கூறி அறுப்பதையும், போரில் புற முதுகிட்டு ஓடுவதையும் பெற்றோரைத் துன்புறுத்துபவனையும், திசை காட்டியைத் திருப்பி விடுபவனையும் அல்லாஹ் சபிக்கிறான். நூல். ஹாக்கிம், நஸயீ

4. எவரொருவர் இஸ்லாமல்லாத பிற மதத்தின் கலாச்சாரத்தின் மீது தவறான உறுதி மொழி எடுத்தாரோ அவன் அதனைச் சார்ந்தவரே

மற்றொரு அறிவிப்பில் எவரொருவர் பிற மதகலாச்சாரங்களைப் பின்பற்றுகிறாரோ அவர் அவர்களைச் சார்ந்தவரே என நபி(ஸல்) அவாகள் கூறினார்கள். நூல். புகாரி, முஸ்லிம் அறிவிப்பவர். ஸாபித் பின் ஸஹாக் (ரலி)

## 39. உலக ஆசை

---

மேலும் (மறுமையை நம்பாத) அவர்கள் “நமது இந்த உலக வாழ்க்கையைத் தவிர வேறு (வாழ்க்கை) கிடையாது நாம் இறக்கிறோம் ஜீவிக்கிறோம் “காலம்” தவிர வேறெதுவும் நம்மை அழிப்பதில்லை” என்று கூறுகிறார்கள் அவர்களுக்கு அது பற்றிய அறிவு கிடையாது - அவர்கள் (இது பற்றிக் கற்பனையாக) எண்ணுவதைத் தவிர வேறில்லை. (45:24)

(நாம் அவரிடம் கூறினோம்) “தாவூதே! நிச்சயமாக நாம் உம்மை பூமியில் பின்தோன்றலாக ஆக்கினோம் ஆகவே மனிதர்களிடையே சத்தியத்தைக் கொண்டு (நீதமாக)த் தீர்ப்புச் செய்யும் அன்றியும், மனோ இச்சையைப் பின் பற்றாதீர் (ஏனெனில் அது) உம்மை அல்லாஹ்வின் பாதையை விட்டும் வழி கெடுத்து விடும். நிச்சயமாக எவர் அல்லாஹ்வின் பாதையை விட்டு வழிகெடுக்கிறாரோ, அவர்களுக்குக் கேள்வி கணக்குக் கேட்கப்படும் நாளை மறந்து விட்டமைக்காக மிகக்கொடிய வேதனையுண்டு. (38:26)

ஹதீஸ்கள்

1. உலக வாழ்வின் அத்தியாவசியத் தேவைகளுக்குப் போதுமான குறைவான செல்வம் அல்லாஹ்வின் நினைவு கூர்தலை விட்டும் அகற்றக் கூடிய பெரும் செல்வத்தைக் காட்டிலும் மிகச் சிறந்தது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல். அஹ்மத் அறிவிப்பவர். அபூதர்தா (ரலி)

2. நரகவாசிகளில் பெரும்பாலோர் செல்வந்தர்களாகவும், பெண்களாவும் இருந்ததை நான் கண்டேன் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல். அஹ்மத் அறிவிப்பவர். இப்னு உமர் (ரலி)

3. செத்த ஆடு ஒண்றை தூக்கி வீசப்பட்டதைக் கண்ட நபி(ஸல்) அவர்கள் அல்லாஹ்வுக்கு இவ்வுலகு இந்த செத்த ஆட்டினைக் காட்டிலும் இழிவானது என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல். அஹ்மது அறிவிப்பவர். ஜாபிர் (ரலி)

## 40. பிச்சை எடுத்தல் (யாசகம்)

---

பூமியில் நடமாடித்(தம் வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்ற) எதுவும் செய்ய முடியாத அளவுக்கு அல்லாஹ்வின் பாதையில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களுக்குத் தான் (உங்களுடைய தான தர்மங்கள்) உரியவையாகும். (பிறரிடம் யாசிக்காத) அவர்களுடைய பேணுதலைக் கண்டு, அறியாதவன் அவர்களைச் செல்வந்தர்கள் என்று எண்ணிக் கொள்கிறான் அவர்களுடைய அடையாளங்களால் அவர்களை நீர் அறிந்து கொள்ளலாம் அவர்கள் மனிதர்களிடம் வருந்தி எதையும் கேட்கமாட்டார்கள் (இத்தகையோருக்காக) நல்லதினின்று நீங்கள் எதைச் செலவு செய்தாலும், அதை நிச்சயமாக அல்லாஹ் நன்கறிவான். (2:273)

ஹதீஸ்கள்.

1. உங்களில் ஒருவர் பிறரிடம் யாசிப்பது தொடர்ந்து கொண்டிருந்தால் கியாமத்து நாளில் தன் முகத்தில் எந்த ஒரு சதைத் துண்டும் தன் முகத்தில் இல்லாதவராக இழிவான நிலையில் அவர் அல்லாஹ்வைச் சந்திப்பார். நூல். புகாரி, முஸ்லிம் (530) அறிவிப்பவர். இப்னு உமர் (ரலி)

2. நிச்சயமாக யாசகம் கேட்பது மனிதன் தன் முகத்தைப் பங்கப் படுத்திக் கொள்வதாகும். எனினும் அவன் தன் தேவைகளை ஆளும் அரசனிடம் கேட்கலாம் அல்லது மிக அத்தியாவசியத் தேவை ஏற்பட்டால் பிறரிடம் கேட்கலாம். நூல். திர்மிதி. (533) அறிவிப்பவர். ஸமுராபின் ஜூ ன்துப் (ரலி)

3. பிறரிடம் கேட்பது மூன்று பேர்களுக்கு தவிர மற்றர்களுக்கு அறவே கூடாது 1. இரு கூட்டத்தார்க்கு இடையில் சமாதானம் செய்து வைத்து அவர்களுக்குறிய நஷ்ட ஈட்டை வழுங்க தான் பொறுப்பேற்றுக் கொண்ட மனிதர். அவர் அதனைப் பொற்றுக் கொள்ளும் வரை பிறரிடம் கேட்பது அவருக்குக் கூடும். பின்னர் கேட்பதை அவர் நிறுத்திக் கொள்வார். 2. வெள்ளம், நெருப்பு, கொள்ளை போன்ற ஆபத்துக்களால் செல்வத்தை இழந்தவர் தன் வாழ்க்கையை நிலைநிறுத்தும் பொருட்டு பிறரிடம் கேட்பது கூடும் போதுமானதைப் பெற்றுக் கொள்ளும் வரை. 3. வறுமையால் பீடிக்கப்பட்ட ஒருவன் அவன் கூட்டத்தைச் சார்ந்த மூன்று கண்ணியமிக்க மனிதர்களால் இவனை வறுமை பீடித்தவிட்டது என சான்று கூறப்பட்டவர் பிறரிடம் யாசிப்பது கூடும். தன் வாழ்க்கைக்குப் போதுமானதை அவர் பெற்றுக் கொள்ளும் வரை இம் மூன்றைத் தவிர வேறு விஷயங்களுக்கு பிறரிடம் யாசிப்பது தடுக்கப்பட்டதாகும். அவ்வாறு யாசிப்பவன் ஹராமானதை உண்ணுகிறான். நூல். முஸ்லிம் அறிவிப்பவர். அபூ பிஸ்ர் சபீஸா (ரலி)

4. உங்களில் ஒருவர் தன் கயிற்றை எடுத்துக் கொண்டு மலைக்குச் சென்று ஒரு விறகுக் கட்டைத் தன் முதுகில் சுமந்துவந்து விற்று அதன் மூலம் அல்லாஹ் அவரின் முகத்தை தேவைகளிலிருந்தும் தடுத்து விடுவது மக்களிடம் அவர் யாசிப்பதை விடச் சிறந்தது. ஏனெனில் யாசிப்பவருக்கு அவர்கள் விரும்பினால் கொடுப்பார்கள். இல்லையெனில் மறுத்து விடுவார்கள். நூல். புகாரி அறிவிப்பவர். அப்துல்லாஹ் பின் ஜூ பைர் (ரலி)